விலை ரூபா 5.00

# ஈழநாடு வாரமலர்

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆடி 14 இதழ் 176

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 30 – 7 – 1995

## கனடாவில் தமிழர்கள் மெழுகுதிரிப் போராட்டம்

(ரொறன்ரோ)

கனடாவில் ஒன்ராரியோ நாடாளுமன்றம் முன்பாக பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழர்கள் மெழுகுதிரிகளை கரங்களில் ஏந்தியபடி ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக இராணுவத்தினர் மேற்கொள்ளும் அட்டூழியங்களுக்கு எதிராகவே இப்போராட்டம் நடைபெற்றுள்ளது.

இதேவேளை கனடாவில் உள்ள தமிழர்கள் அனைவரும் கையெழுத்திட்ட மகஜர்கள் கனேடிய பிரதமருக்கும், கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. -சி

க. பொ. த. (உயர்தர)

## பரீட்சை வினாத்தாள்கள் நேற்று காலை வந்தன

(யாழ்ப்பாணம்)

க. பொ. த. உயர்தர பரீட்சைக்கான முதற்தொகுதி வினாத்தாள்கள் மற்றும் ஆவணங்கள் நேற்று ஹபரண கப்பலில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

இவ்வினாத் தாள்களை யாழ். கல்வி வலயம் இரண்டின் பணிப்பாளர் கே. கந்தசாமி மற்றும் கல்வித் திணைக்கள அதிகாரிகளால் கொழும்பிலிருந்து திருகோணமலைக்கு எடுத்துவரப்பட்டு பின்னர் திருகோணமலையில் இருந்து ஹபரண கப்பல்மூலம் நேற்றுக் காலை பருத்தித்துறை துறைமுகத்துக்கு எடுத்துவரப்பட்டது.

யாழ். மாவட்டம் முழுவதும் ஒன்பது ஆயிரத்துக்கு

(7ம் பக்கம் பார்க்க)

## இரு தாக்குதலில் 3படையினர் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பிலும், அனுராதபுரத்திலும், விடுதலைப் புலிகள் மேற்கொண்ட திடீர் தாக்குதலில் மூன்று படையினர் பலியானர்கள், 12 பேர் படுகாயமடைந்துள்ளதுடன் பல ஆயுதங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

நேற்று அதிகாலை 1.05 மணியளவில், மட்டக்களப்பு வவுணதீவு பாலத்துக்கருகில் அமைந்துள்ள இரு இராணுவ காவலரண்கள் மீது விடுதலைப்புலிகள் நடாத்திய ஐந்து நிமிடத் திடீர் தாக்குதலில் இரு இராணுவத்தினர் பலியானதுடன், 8 பேர் படுகாயமடைந்தனர்.

(7ம் பக்கம் பார்க்க)



லண்டன் ரூட்டிங் மாநகரில் அண்மையில் விடுதலைப்புலிகளும் லண்டன் வாழ் தமிழ் மக்களும் இணைந்து, தமிழீழ கோரிக்கையை முன்வைத்தும், தமிழீழ மக்கள் மீதான இராணுவ வன்முறைகளைக் கண்டித்தும் நடாத்திய ஆர்ப்பாட்டப் பேரணியின் ஒரு பகுதியை படத்தில் காணலாம். படம்: சுபாஸ்

# ★ யாழ். குடாநாட்டிற்கு மருந்துப் பொருட்களை அனுப்ப பாதுகாப்பு அமைச்சு தடை!

## - அரச சார்பற்ற நிறுவனங்கள் குற்றச்சாட்டு -

(கொழும்பு)

யாழ். குடாநாட்டிற்கு மருந்துப் பொருட்கள் அனுப்பப்படுவதை பாதுகாப்பு அமைச்சு தடுத்து வருவதாக அரச சார்பற்ற நிறுவனங்கள் அரசை கடுமையாக குற்றம்சாட்டியுள்ளன என பி. பி. ஸி தெரிவித்தது.

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு செல்லக்கூடாதென அரசு விதித்த பொருளாதாரத்தடைப் பட்டியலில் மருந்துப் பொருட்கள் இல்லாத நிலையிலும் அவை யாழ்ப்பாணம் செல்வதைபாதுகாப்பு துறையினர் தடுத்துவருகின்றனர்.

யாழ். குடாநாட்டிலுள்ள ஆஸ்பத்திரிகளில் மருந்துப் பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் அரச சார்பற்ற நிறுவனங்கள்

(8ம் பக்கம் பார்க்க)

## தேசிய பாதுகாப்பு நிதி செலுத்துமிடங்கள் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழர்கள் கைகட்டி வாய் பொத்தி நின்று, தான் கொடுப்பதைப் பெற்றுக் கொண்டு நல்ல அடிமைகளாக வாழவேண்டுமென்று கருதுகிறது சிங்களப் பேமினவாத அரசு. அதற்காகச் சிங்கள அரசு தமிழர்கள்மீது தொடுத்துள்ள கொடிய போரை முறியடித்து, தமிழர்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

வெளியீட்டு விழா

நிதர்சனமும் மட்டு - அம்பாறை சிறப்புப் படையணியும் இணைந்து தயாரித்து வழங்கும்

சி. சேரனின் 'உறங்காத கண்மணிகள்'' (முழுநீள திரைப்படம்)

இடம்: ஸ்ரீதர் திரையரங்கு -யாழ்ப்பாணம். காலம்: 1-8-1995 பிற்பகல் 3.00 மணி. (ஏ-5152)

## வரி விளம்பரம்

### சேவை

சகலவிதமான கதிரைகளும் உங்கள் வீட்டுக்கு வந்து பின்னித் தருபவர்கள். ராஜன் பின்னலகம், 286, ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம் சந்தி.
(ஏ-5134)

### தேவை

செவ்வாய்க்குற்றமற்ற ஆனால் பாவம் கூடிய ஆண் பட்டதாரி ஆசிரியர்கள் எம்மிடம் உண்டு, இ. பாஸ்கரன் திருக்குமரன் மங்கள ஏஜன்சி இல: 41, பிரப்பங்குளம் வீதி, வண்ணார்பண்ணை. (சி 1564)

### O/L Maths

ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கு குறைந்த காலங்களில் விஷேட சித்திக்குக் கற்பிப்பதில் 28 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டுக்குளி. (சி-1570)

### விறகுக்கரி சாணவிருட்டி

கொதிகலனுக்கு பாவிக்க விறகுக்கரி விற்பனைக்குண்டு: தேவையான கணகணப்பைத் தந்து சமையலைச் சிரமமின்றி மேற்கொள்ளச் சாணவிருட்டி விற்பனைக்குள்ளது. ''மில்க் வைற்''
(ஏ-5158)

### மணமகன்தேவை

கனடாவில் உத்தியோகம் வகிக்கும் - செவ்வாய்குற்றமற்ற, 37 வயதும் 5 அடி 3 அங்குல உயரமும் அச்சுவினி நட்சத்திரமும் கிரகபாவம் 28ம் முள்ள படித்த அழகிய இந்துமத மணப்பெண்ணுக்கு, தொழில் புரியும், பண்புள்ள மணமகன் தேவை. கனடாவில் வசிப்பவர் விரும்பத்தக்கது. முழுவிபரங்களுடன் கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல C 1572 C/o ஈழநாடு லிமிட் யாழ்ப்பாணம்.
சி-1572

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

### கல்விப் பட்டப்பின் டிப்ளோமா ஆண்டுத் தேர்வு - 1994

கல்விப் பட்டப்பின் டிப்ளோமா முழுநேரம், பகுதிநேரம்-1, பகுதிநேரம்-2 ஆகிய மாணவர்கள் ஆண்டுப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் ஒரு பாடத்திற்கு ரூபா 50/- வீதம் மக்கள் வங்கிக்கிளையில் செலுத்தி பற்றுச் சீட்டை விண்ணப்பங்களுடன் இணைத்து ஆகஸ்ட் 31-ம் திகதிக்கு முன்னர் கல்விக் கிளையில் சமர்ப்பிக்குமாறு வேண்டுகிறேன்.

பதிவாளர்

(ஏ-5154)

### வைத்தியம்

செங்கண்மாரி (Hepatitis) இரைப்பை அல்சர், ஆஸ்மா மூட்டுவாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, கலை காலவியல், சருமநோய்கள், மாதவிடாய்குத்து. இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம். (சி-1533)

### அக்கரைச் சீமையில் நாவல் ரூபா 25/-

250 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் அக்கரைச் சீமையில் நாவல் 100 பக்கங்கள் மலிவு விலை ரூபா 25/- எங்கும் கிடைக்கும். (சி 1549)

### அழகிய கோழிகள் விற்பனைக்கு

அழகிய பொன்நிறதாராக் குஞ்சுகள் (மொஸ்கோலி), பிறாமா, சில்கிசி (பஞ்சு போன்ற கோழி) வெள்ளை, கறுப்பு நிற கினிக்கோழிகள் விற்பனைக்குண்டு. N ரமேஷ் C/o K நித்தியானந்தன் (வட்டுக்கோட்டைவீதி) சித்தன்கேணி
[C1578]

தையல் நாயகி அம்பாளின் திருவருளால்
மக்கள் துயர்நீங்க இறைஞ்சும்

## ஸ்ரீலங்கா புத்தகசாலை

234, காங்கேசன்துறை சாலை,
யாழ்ப்பாணம்.
[ஏ 5135]

அம்மா தாயே உன் அருளால் எம் துயர் தீர வேண்டுகின்றோம்

## அந்தோனிப்பிள்ளை மிதிவண்டி திருத்தகம்

50, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
[ஏ 5138]

வாலாம்பிகை, வடிவாம்பிகை,
தையல்நாயகி அம்மா
சரணம்! சரணம்!! சரணம்!!!

## பரிமளா களஞ்சியம்

26 A, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
(ஏ-51 53)

வெளிவந்துவிட்டது!

## அறிவுக்களஞ்சியம்-33

விலை ரூபா 10/- மட்டுமே!
(ஏ-5145)

வெளிவந்துவிட்டது! விற்பனையாகிறது!

★ தமிழ் இலக்கியம் ★

10, 11ஆம் ஆண்டுக்குரியது

★ நளவெண்பா ★ நாலடியார் ★ பெரியபுராணம்
★ கங்கை விடுத்த ஓலை ★ சிறுப்புராணம்
★ ஆசாரக்கோவை ★ இலங்கை வளம்
★ செய்னம்பு நாச்சியார் மான்மியம்

தொகுப்பு: புலவர் இளங்கோ

★ திருக்குறள் ★

பொருளதிகாரம், — ஒழிபியல்
1996-ம் க. பொ. த. உ/த தேர்வுக்குரியது.
ஆக்கம்: க, சொக்கலிங்கம், எம், ஏ.
கிடைககுமிடம் :

## சிறி சுப்பிரமணிய பொத்தகக் களஞ்சியம்,

235, காங்கேசன்துறை சாலை,
யாழ்ப்பாணம்.
(ஏ-5150)

## அங்காடிகள் அமைப்பு

(குருநகர்)

யாழ் ப.நோ.கூ.சங்கத்தினால் ஒவ்வொன்றும் ரூபா 15 லட்சம் செலவில் ஏழு கூட்டுறவு அங்காடிகள் யாழ்.ப.நோ.கூ.சங்க எல்லைப்பரப்பினுள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இக் கூட்டுறவு அங்காடிகளை அமைக்கும் இடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் இக் கூட்டுறவு அங்காடிகளில் பாடசாலைகளுக்குத் தேவையான உபகரணங்கள் விற்பனை செய்யப்படவுள்ளதாகவும் யாழ் ப.நோ. கூ. சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

95-இ

## A/L 95

பரீட்சைக்குத் தோற்றும்
மாணவர்களுக்காக
விஞ்ஞான - வர்த்தக - கலைப் பிரிவு
அனைத்துப் பாடங்களுக்குமான
மாதிரிப் பயிற்சி வினாத்தாள்கள்
விடைகளுடன் எம்மிடம்
பெற்றுக்கொள்ளலாம்.

**BOND** 58 A, ஸ்ரான்லிவீதி
யாழ்ப்பாணம்.
(ஏ-5157)

★ பட்டுக்குடை ★ கொடி
★ ஆலவட்டம் ★ வாகமாலை

அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

## ஞானம் ஆடையகம்

(அஜந்தாஸ்)
34, சோதியா தெரு, பெரியகடை
யாழ்ப்பாணம்.
[ஏ 5136]

## யாழ். றோட்டறி பதவியேற்பு நிகழ்வு (Installation Ceremony)

யாழ் றோட்டறி கழகம் தனது 55வது வருடத்திற்கான உத்தியோகத்தர்கள் பதவியேற்புநிகழ்வை இன்றுஞாயிற்றுக்கிழமை 30-07-95 மாலை 4. 30 மணிக்கு யாழ். ஞானம்ஸ் ஹோட்டலில் நடாத்தவுள்ளது.

றோட்டரக்ட்கழக தலைவர், செயலாளர் இன்ரறக்ட் கழக தலைவர், செயலாளர் ஆகியோரை அன்புடன் அழைக்கின்றோம்.

Rtn. PHSM. க. கேசவன்
தலைவர்
யாழ். றோட்டறிக் கழகம்

128, யமுனா வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(ஏ 5161)

29-7-95ல் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தில் Rtn PHSM. க. கேசவன் என்பதற்குப் பதிலாக க. கணேசன் எனப் பிரசுரிக்கப்பட்டுள்ளது. தவறுதலுக்கு வருந்துகிறோம்.

## தபால்மூலம் கல்விச் சேவை

★ ஆண்டு 3,4, 5
5 [புலமைப்பரிசில்]
6, 7. 8, 9, 10
O/L
A/L [விஞ்ஞான—வர்த்தக—கலை]
மாணவர்களுக்காக

★ ஒவ்வொரு மாதமும் பயிற்சி வினாத்தாள்கள் எம்மால் வெளியிடப்படுகின்றன.
★ அவற்றிற்கு வீட்டில் வைத்தே விடையளித்து நேரடியாகவோ / கடித மூலமோ எமக்கு அனுப்பி வைக்கலாம்.
★ எமக்கு அனுப்பிய விடைகள் திருத்தப்பட்டு விடைகளுடன் உங்களிடமே அனுப்பி வைக்கப்படும்.

விபரங்கட்கு:

**BOND**

58A, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.
(ஏ- 5156)

# புலிப்பாய்ச்சலும் அரசியலும்

வார சாரம்

புலிப்பாய்ச்சல் நடவடிக்கையால் விரட்டியடிக்கப்பட்ட படையினரின் உயர் அதிகாரியும் முன்னேறிப்பாய்தல் நடவடிக்கைக்குத் தலைமை வகித்தவருமான ஜெரகான் தலுவத்தை தமது தலைமையகத்தின் பொதுசனத் தொடர்பிரிவு நடந்துகொண்டவிதத்தால் தங்களது நோக்கம் அம்பலப்படுத்தப்பட்டுவிட்டதாக சீறிப்பாய்கிறார்.

### ரத்வத்தை

இது ஒருபுறமிருக்க கைப்பற்றும் பகுதியைத் தொடர்ந்து பாதுகாத்துவைக்க முடியாதென்று தெரிந்தும், பெரிய உயிர்ப்பலியுடன் இந்தளவு விசாலமான பகுதியை அரசபடைகள் ஏன் கைப்பற்றின என்று பாதுகாப்புப் பிரதி அமைச்சர் ரத்வத்தை உயர் இராணுவ அதிகாரிகளை சாடியுள்ளார்.



### குணத்திலகா

இராணுவ விடயத்தில் அனுபவமுள்ள அதிகாரிகளை ஒதுக்கிவிட்டு அரசியல்வாதிகளின் விருப்பு வெறுப்புக்களை பூர்த்தி செய்வதற்கு யுத்தத்தைப் பயன்படுத்துகின்றனர். யூலை 15-ந் திகதி வழங்கப்பட்ட நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழித்துக் கட்டும் வாக்குறுதியை நிறைவேற்ற முடியாமல் போனதால் அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளை திசைதிருப்பவும் விடுதலைப்புலிகளுக்கு தொடர்ந்து கிடைத்துவந்த வெற்றிகளால் அரசுக்கு ஏற்பட்ட நெருக்கடியை சமாளிப்பதற்கும் அரசியல்வாதிகளால் வகுக்கப்பட்ட ஒரு திட்டமே முன்னேறிப்பாய்தல் இராணுவ நடவடிக்கை என்று முன்னாள் விமானப் படைத் தளபதி ஹரி குணதிலகா கூறுகிறார்.

### சந்திரிகா

சந்திரிகா அம்மையாரோ ஒருபடி மேலுக்குச் சென்று முன்னேறிப்பாய்தல் நடவடிக்கையின்போது நிலைமை இவ்வளவு மோசமாக இருந்தது எனக்குத் தெரியாது. யாழ். நகரிலும் ஷெல்கள் வந்து விழுந்தனவா? என்று ஆச்சரியப்படுகிறாராம்.

### தோல்வி

புலிகளை வெல்லுவோம், பாரிய தாக்குதல் மூலம் அவர்களைத் தோற்கடிப்போம் என்று வீரம் பேசிக்கொண்டு மாமனும் மருமகளும்வடபகுதியில்யுத்தத்தைத் தொடங்கிவிட்டு இப்போது தோல்வி ஏற்பட்டமையை ஜீரணிக்க முடியாது கண்டபடி பிதற்றுகிறார்கள். எனக்குத் தெரியாது. ஏன் இப்படிச் செய்தீர்கள் என்றெல்லாம் கேட்கிறார்கள்.

### போர்

போர் என்னும்போது நாம் விளங்கிக்கொள்வது ஒரு இராணுவம் எதிரி இராணுவத்துடன் நேரடியாக அல்லது கெரில்லா நடவடிக்கை மூலம் போராடுவதேயாகும். உதாரணத்துக்கு முன்னேறிப்பாய்தல் நடவடிக்கையில் முன்னேறி வந்த சிங்கள இராணுவத்தை விடுதலைப்புலியினர் நேரடியாக எதிர்கொண்டு விரட்டி அடித்தனர். ஆனால் சிங்கள இராணுவமோ தமது எதிரியான விடுதலைப்புலிகளைத் தாக்குவதில்லை. அவர்கள் தாக்குவதும் விரட்டியடிப்பதும் தமிழ்ப் பொதுமக்களைத்தான். மக்களை அவர்களது வீடுகளிலிருந்து விரட்டிக் கோவில்களில் போய் இருங்கள் என்று கூறுவதும், பின்னர் குண்டு போட்டுக்கொல்லுவதும்தான் சிங்கள இராணுவத்துக்குத் தெரிந்த போர்முறை.

### தீர்வு

இதற்கிடையில் அரசியல் தீர்வுத்திட்டம் ஒன்று பற்றிய செய்தி வெளியில் கசியத் தொடங்கியுள்ளதாம் அதுவும் அமைச்சர் அவை மட்டத்தில் விவாதிக்கப்படாது வெளி ஏ ாப்போகிறதாம். ஆனால் அது வெளிவரப்போகுமுன்னரே கொழும்பில் இருந்து இயங்கிக்கொண்டிருக்கும் உதிரித் தமிழ்க் குழுக்களும்



தமிழர் விடுதலைக் கூட்டணியினரும் வெளிவரவுள்ள தீர்வுத்திட்டம் தமிழர்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடியவையாக விருக்கும், தமிழ்மக்கள் அதை வரவேற்பார்கள், விடுதலைப் புலிகள் அதை ஏற்காவிடின் மக்கள் அவர்களை ஓரம்கட்டி விடுவார்கள் என்றெல்லாம் தமது மனங்களில் உள்ள அவாவை வெளிக்காட்டுகின்றனர். தீர்வுத்திட்டத்தை அமுலாக்குவதற்கு அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையில்லை என்பது இவர்களுக்குத் தெரியாதா? பௌத்த சிங்களப் பேரினவாதம் எந்த ஒரு சிறு சலுகையையும் தமிழர்களுக்கு கொடுப்பதை ஏற்றுக்கொள்ளுவார்களா என்பவற்றையெல்லாம் சிந்திக்காது பேசுவது இவர்களுக்கு அரசியலில் அரிச்சுவடி கூடத் தெரியாது என்பதை வெளிக்காட்டுகிறது.

### நிர்வாகம்

எப்படியாவது இடைக்கால நிர்வாகஅமைப்பில் அதிகாரத்தைப் பெறலாம். இந்தியாவின் முகவர்களாக தாம் நடந்துகொள்ளலாம் என்றெல்லாம் கனவு காண்கிறார்கள். வட-கிழக்கு விடுதலைப் புலிகள் கட்டமைப்புக்குள் இயங்கி வருகிறது. அவர்களின் ஒத்துழைப்பில்லாமல் அப்பிரதேசங்களில் வேறெவரும் இயங்க முடியாது என்பதை இவர்கள் விரைவில் அறியத்தான் போகிறார்கள்.

ச. தியாகராசா

---

நமது நோக்கு

## உணவுத் தட்டுப்பாடு

யாழ். மாவட்டத்தில் உணவுக் கையிருப்பு மிகவும் மோசமான நிலையில் உள்ளது. இரு வாரங்களுக்கான உணவுப்பொருட்களே தற்போது உள்ளது என்று யாழ். அரச அதிபர் ஜனாதிபதிக்கு அவசர கடிதம் எழுதியுள்ளார்.

சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் உணவுக் கப்பல்களுக்கான பாதுகாப்பை வாபஸ்பெற்றுள்ளது. இதன் காரணமாக குடாநாட்டு மக்களின் உணவுத்தேவை பூர்த்தி செய்யமுடியாதுள்ளது. ஆகவே தொடர்ந்து மக்களுக்கு உணவுப் பொருள்களை அனுப்பி வைப்பதற்கு ஆவன செய்யும்படி அரச அதிபர் ஜனாதிபதியை வேண்டியுள்ளார்.

அரசாங்கம் இதுபற்றி நடவடிக்கை எடுக்குமா? பௌத்த சிங்களப் பேரினவாதிகள் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்குவதற்காக நடத்தும்போரின் ஒரு அம்சம்தான் வடபகுதிக்கு வரும் பொருட்கள்மீதான தடை. அப்படிப்பட்ட அரசு தமிழ் மக்களைப் பட்டினி போட்டு சாகடிக்கவும் அதன்மூலம் யுத்தத்தை வெற்றி பெறச் செய்வதற்கும் ஒருபோதும் தயங்காது. மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களுக்கு தாக்குப் பிடிக்கமாட்டாத படையினர் பல முகாம்களுக்கு மூடுவிழா செய்துள்ளனர். படைகள் மூடிவிட்டுச் செல்லும் முகாம்களில் விடுதலைப் புலிகள் நிலைகொண்டுள்ளனர் என்று இராணுவமே கூறுகிறது. இதன் காரணமாக பெரும் நிலப்பரப்பை விடுதலைப் புலிகள் விடுவித்து வருகின்றனர். இதை அரசால் ஜீரணிக்க முடியவில்லை. அதனால் விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்பட்ட மட்டக்களப்பு பிரதேசங்களுக்கு உணவுப் பொருட்களை எடுத்துச் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் போன்ற அமைப்புக்கள் இயங்குவதால் அரசும் இராணுவத்தினரும் செய்யும் அட்டூழியங்கள் வெளியுலகிற்கு தெரியவருகிறது. ஆகவே இவ்வமைப்புகளை வெளியேற்றவேண்டும் என்ற கோஷம் பௌத்த சிங்களப் பேரினவாதத்தால் முன்வைக்கப்படுகிறது. இதற்கு பௌத்த மகாசங்கத்தினர் மிகவும் முக்கியம் கொடுத்து எதிர்ப்புகளை முன்வைக்கின்றனர்.

அரசும், இராணுவமும் தமது பங்கிற்கு, செய்யப்பட்ட உடன்பாடுகளுக்கு முரணாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்பில் வரும் உணவுக் கப்பல்களிலிருந்து உணவுப் பொருட்களைப் பறித்தல் போன்ற நடவடிக்கைகளைச் செய்து செஞ்சிலுவைச் சங்கத்தினருக்கு நெருக்கடிகளைக் கொடுக்கின்றன. இதனால் செஞ்சிலுவைச் சங்கம் உணவுக் கப்பல்களுக்கு கொடுத்த பாதுகாப்பை வாபஸ்பெற்றுவிட்டது. அவர்கள் அவ்விதம் செய்ய வேண்டுமென்றே அரசும் எதிர்பார்த்தது. இந்தச் சாட்டை வைத்துக்கொண்டு குடாநாட்டுக்கான உணவுப் பொருட்களை அரசு நிறுத்தியது.

இவ்வாறு அரசு நடந்துகொள்வதை அதாவது தனது பிரசைகள் என்று கூறும் தமிழ் மக்களுக்கு உணவுப்பொருட்களை அனுப்பாது பட்டினிபோட்டுக் கொல்லும் இழிவான மிலேச்சத்தனமான செயலை வெளியுலகமும் பார்த்துக்கொண்டு இருக்கப்போகின்றதா?

---

# சீனாவின் ஏவுகணை பரீட்சிப்பும்

# தாய்வானின் தனிநாட்டு கோரிக்கையும்

உலக வலம்

தாய்வான் சீனாவுடன் இணைந்தோ அல்லது சுயராஜ்யம் கொண்ட நாடாகவோ என்னவாக இருந்தாலும் ஒரு தனித்துவம்மிக்க அரசாங்கமாக இருக்கவேண்டுமென்றுதான் தாய்வான் மக்களும் தாய்வான் ஜனாதிபதியும் எண்ணி செயற்பட்டு வருகின்றார்கள்.

இதன்காரணமாக கடந்த காலங்களில் சீனாவுடன் நல்லுறவைப் பேணி வந்தது தாய்வான். திடீரென ஜனாதிபதி லீ டென் யூ கடந்த யூன் மாதம் அமெரிக்காவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

அன்றுதொட்டு சீனாவுக்கும் தாய்வானுக்கும் இடையில் விரிசல் நிலை ஏற்பட்டது. தாய்வான்ஜனாதிபதியின் அந்த விஜயம் சீனாவால் பொறுக்க முடியவில்லை. தாய்வான் ஆழமறியாமல் காலை விடுகிறது என்று சீனாவை எச்சரித்து. தனது பலத்தை காட்டுமுகமாக தாய்வானுக்கு 140 கிலோமீற்றர் தூரத்தில் பல ஏவுகணைகளைப் பரீட்சித்தது.

இந்த ஏவுகணை பரீட்சிப்புக்குப்பின் தாய்வான் ஜனாதிபதி சுதந்திர ராஜ்யம்உருவாக்கும் முயற்சியில் இருந்து தோல்வி கண்டார் என்று சீனா விமர்சித்திருக்கிறது.


1949-ம் ஆண்டு உள்நாட்டுப்போர் முடிவடைந்த பின்னர் தாய்வான் ஒரு கிளர்ச்சிவாதிகளின் மாகாணமாகவே சீனா கருதி வந்தது. பல தடவை படைப்பலத்தைப் பிரயோகித்து அடிக்கடி அச்சுறுத்தலை விடுத்துக்கொண்டிருந்தது.

சர்வதேச ரீதியில் தாய்வான் வெளிநாடுகளுடன் எந்தவித உறவுகளை வைத்திருக்க அதிகாரமுமில்லைஎன்றும் சீனா கூறிக்கொண்டு வருகிறது.

சீனாவின் ஏவுகணைப் பரீட்சிப்பால் தாய்வான் மக்கள் மத்தியில் அச்சமும் ஸ்திரமற்ற நிலையும் ஏற்பட்டுள்ளது என்று தாய்வான்அதிகாரிகள் அறிவித்திருக்கின்றனர்.

ஆனால் தாய்வானில் மேற்கொண்ட கருத்து கணிப்பீடு ஒன்றில் 1013 பேரில் 71 சதவீதமானோர் சீனாவின் ஏவுகணைப் பரீட்சிப்பால் எந்தவித அச்சமும் கொண்டிருக்கவில்லை என்று தெரிவித்திருக்கின்றார்கள்.

தாய்வான் சீனாவுடன் இணையுமா? அல்லது தனிநாடாகுமா?எதிர்காலம்தான் தீர்மானிக்க வேண்டியிருக்கிறது.



மிஸிஸ் டா: டார்லிங்

மிஸ்டர் டா: யேஸ் டார்லிங்

மிஸிஸ் டா: தேவாலயத்துக்கு குண்டு போடுகிறது பொதுமக்களுக்கு ஷெல் அடிக்கிறது என்ன சொல்றீங்க?

மிஸ்டர் டா: அதுதான் ரத்தவத்தை நாய்கரிகம்.

# தீவுகளின் இராஜகுமாரி எப்படி இந்து சமுத்திரத்தின் பிச்சைக்காரியானுள்

[ 7 ]

## பண்டாரநாயக்காவின் பல முகங்கம்

ம. ஐ. மு. தேர்தலில் வெற்றியீட்டியது. ஐ. தே. க. படுதோல்வியடைந்தது. சிங்கள ஆசிரியர்களும், சிங்கள மொழி மூலம் கல்வி பயின்ருேரும் ஆயுள்வேத வைத்தியர்களும், உள்ளூர் உற்பத்தியாளர்களும், சிறு வர்த்தகர்களும், பௌத்த குருமாரும், சிங்கள இனவாதிகளும் பண்டாரநாயக்காவின் ஆதாரத் தளமாய் இருந்தனர். ஆயுள்வேத வைத்தியர், சிறு வர்த்தகர், பழமைபேணிகள் அடங்கிய குழாமே பண்டாரநாயக்காவின் அணியினர் என்றும் மாக்ஸிஸ்டுக்களிடமிருந்தும் மேலைத்தேச முதலாளிகளிடமிருந்தும் மேற்படி வர்க்கங்கள் பண்டாரநாயக்காவிடம் பாதுகாப்பை எதிர்பார்த்து அவரை ஆதரித்தனர் என திரு. டென் சிவ்பீரிஸ் கூறினுர்.

ஒருபுறம் மாக்ஸிஸ கட்சிகளையும், மறுபுறம் ஐ. தே. கவின் மேலைத்தேச முதலாளித்துவத்தையும் ஆதரிக்க முடியாத உள்ளூர் சிறு முதலாளிகளுக்கு பண்டாரநாயக்காவின் கொள்கை ஒரு விடிவெள்ளியாகக் காட்சியளித்தது. பண்டாரநாயக்கா இடதுசாரிகளுடன் கூட்டும் உறவும் கொண்டிருந்தாராயினும் அவர் இடதுசாரிகளின் பக்கம் போகவில்லை. பதிலாக இடதுசாரிகளைத் தன் பக்கம் கொண்டு வந்தார். பண்டாரநாயக்கா இடதுசாரிகளை அனுசரித்து நடந்து கொண்டமையானது மிதவாத இடதுசாரிகளின் ஆதரவை சு. க.விற்குப் பெற்றுக் கொடுக்க உதவியது. பண்டாரநாயக்காவின் கொள்கையும் நடவடிக்கையும் இடதுசாரிகளைப் பெரிதும் தோற்கடிக்கத்தக்க வியூகத்தைக் கொண்டிருந்ததெனலாம். பண்டாரநாயக்காவின் கொள்கையானது இடதுசாரிகளை சு. க.விற்குள் கரைந்துபோக வழிவகுத்தது. இவ்வகையிற் பார்த்தால் இடசாரிகளின் முக்கிய எதிரி பண்டாரநாயக்காதான்.

அக்காலகட்ட இடதுசாரிகள் முற்போக்கான எண்ணங்களைக் கொண்டவர்களாக இருந்தபோதிலும் புரட்சிகர மற்றவர்களாயும் தொழிற் சங்கவாதப் போக்கையே பெரிதும் கொண்டவராயுமிருந்தனர். வரலாறுபற்றிய இவர்களது மதிப்பீடு தவருனதாகஇருந்தது மட்டுமன்றிக் கற்பனை நிறைந்ததாகவுமிருந்தது. உள்நாட்டு அரசியல் நிலைமைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதிற்குப்பதிலாக வெளிநாடுகளிலுள்ள மாக்ஸிஸ இயக்கங்களுக்கு இடையேயான பிரச்சினைகளுக்கும் கொள்கைகட்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்து அவற்றின் பெயரால் உள்நாட்டிற் பல குழுக்களாகப் பிரிந்து மோதுண்டனர். இடதுசாரி இயக்கங்களுக்கிடையேயான இத்தகைய சிக்கல்களைப் பண்டாரநாயக்கா தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி முன்னேறலாஞர். ''சுதந்திரம்' அடைந்த காலத்தில் எதிர்க்கட்சியாகவும் மாற்று அரசாங்கம் அமைக்கக்கூடிய சக்தியாகவும் இருந்த இடதுசாரிகளையும் முந்திக்கொண்டு பண்டாரநாயக்காவால் அரசாங்கம் அமைக்கமுடிந்தது. இவ்வகையில் மதிப்பீடு செய்யுமிடத்து பண்டாரநாயக்காவால் ஒரே நேரத்தில் ஐ,தே க.வையும், இடதுசாரிகளையும் தோற்கடிக்க முடிந்ததென்றே கூறவேண்டும்.

இடதுசாரிகளை அதன் கருஅறையில் வைத்துத் தோற்கடித்தது ஐ. தே. க. என்று சொல்வதைவிட பண்டாரநாயக்காவும் அவரது சு.கவும் என்று சொல்வதே பெரிதும் பொருத்தமானது. சமூக உடமைவாதக் கொள்கையைக் கதைப்பதன்மூலம் பண்டாரநாயக்கா ஒருபுறம்தன்னை ஓர் இடதுசாரியாகவும் மறுபுறம் தேசிய முதலாளித்துவத்தை ஆதரிப்பவர் ஆகவும் காட்டிக் கொண்டதன்மூலம்ஒருவிலாங்குத்தனமானநடவடிக்கைகளை அவராற் செய்யமுடிந்தது.

இந்த விலாங்குத்தனம் இடதுசாரிகளைச் சீரழிக்க பெரிதும் உதவியதுஇதற்கானபண்டாரநாயக்காவின் கோட்பாட்டு விளக்கத்தை அவரது உரையிலிருந்தேஅவதானித்தல்நலம், இதுபற்றி அவர் கூறுகையில், ''நாடாளுமன்றத்திலும் ஜனநாயகத்திலும் நம்பிக்கையற்ற மாக்ஸிஸ வாதிகள்தான் எதிர்க்கட்சியில் இருக்கின்றனர். அதற்கு மாற்றீடாகஜனநாயகநம்பிக்கைகளைகொண்ட கட்சிதேவை. ஒரு ஜனநாயகக் கட்சி மட்டும் இருந்து ஜனநாயகத்தைச்சிறப்புறநடாத்த முடியாது'' என்று 1951ம் ஆண்டு சிங்கள மகாசபையின் வருடாந்த கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டிருந்தார். இடதுசாரிகளை கருவறுக்கும் கொள்கையில் பண்டாரநாயக்கா எப்படி ஒரு திட்டவட்டமான அணுகு முறையுடன் இருந்தார் என்பதைஇது தெளிவாக்குகிறது.

பண்டாரநாயக்காவின் தேசிய மயமாக்கற் கொள்கைகள் அவரிற்கு இடதுசாரிச் சாயத்தைப் பூசியது.இதனல் இடதுசாரிகளுக்கிருந்த செல்வாக்குத் தளம் பண்டாரநாயக்காவை நோக்கித் திரும்பத்தொடங்கியது. பண்டாரநாயக்கா தோற்றப்பாட்டிற்கு மரத்தை இருக்கவிட்டு செயலில் அதன் வேரை அறுத்தது போல இடதுசாரிகள் விடயத்தில் நடந்துகொண்டார். இறுதியில் இடதுசாரி விருட்சம் பிடுங்கப்படாமலே நீண்ட இடத்திற் பட்டுப்போனது.

பண்டாரநாயக்க அரசாங்கம் பதவிக்கு வந்ததும் உள்நாட்டில் மற்றைய இனங்களின் முதுகில் சிங்களபௌத்த இனம் கோலோச்சுவதற்கான வாய்ப்புக்கள் முழுமையாக உருவாகின. தனிச் சிங்களச் சட்டம்நிறைவேற்றப்பட்டது. பிரித்தானியர் தளங்கள் அகற்றப்பட்டன. இலங்கை வங்கி, கொழும்புத்துறைமுகம், காப்புறுதி நிறுவனங்கள், தனியார் பஸ் கம்பனிகள் என்பன தேசியமயமாக்கப்பட்டன. வெளிநாட்டு வர்த்தகத்திற் கட்டுப்பாடுகள் கொண்டுவரப் பட்டன.

பண்டாரநாயக்கா எதிர் பார்த்தபடி வெளிநாட்டுக் கொம்பனிகளையும் நிறுவனங்களையும் தேசியமயமாக்கல் இலகுவான காரியமாய் இருக்கவில்லை. ஐ. தே. க.வும் இலங்கையில் இருந்த ஆங்கில முதலீட்டாளர்களும், அந்நிய கொம்பனிகளுடன் தொடர்புள்ள இலங்கை வர்த்தகர்களும், இறக்குமதி வர்த்தகர்களும், மிஷனரிகளும், ஐ. தே. க. சார்புக் குடும்பப் பத்திரிகைகளும் மேலைத்தேசங்களும் பண்டாரநாயக்காவிற்குப் பெரும் சவாலாய் அமைந்தன. இதனல் மேலைத் தேசங்களில் பொருளாதார நலன்களைப்பண்டாரநாயக்காவால் பெருமளவிற் கட்டுப்படுத்த முடியவில்லை. இவரது ''தேசியமயமாக்கல்'' எல்லாம் இனப்பரிமாணத்தில் சிங்களமயமாக்கலாயின.

மு. திருநாவுக்கரசு

---

அத்தியாயம் – 3

# ஈழக் கடற்பரப்பில் ஆழக்காலூன்றிய சோழர் வழியில்.. வேங்கைக் கடல வீரன்

பண்டைய ஈழமண்ணில் தமிழினம் சிறப்புடன் வாழ்ந்திருக்கிறது என்பதற்கு பல வரலாற்ருசிரியர்களின் சான்றுகளும், கர்ணபரம்பரைக் கதைகளும் நமக்குச் சாட்சியாகவுள்ளன. 'சூரன்' என்ற தமிழ் மன்னனைப் பற்றியும் பரவலாக சில பழங்கதைகளின் மூலம் அறியமுடிகிறது. யார் இந்த சூரன்? இக்கேள்விக்கு யதார்த்தபூர்வமாக விடையளிப்பது மிகவும் கடினம், ஏனெனில் சூரனைப் பற்றிப் பல்வேறு கதைகள் உலாவுகின்றன, பெரும்பாலான கதைகள் புராணம் சம்பந்தமானவை.

அதிலொன்று,

கடவுளான முருகன், கொடுமை நிறைந்த அரசனை சூரனை [அசுரனை] அழித்ததன் மூலம், தர்மத்தையும் நீதியையும் காப்பாற்றியதாக புராணக் கதைகள் சில கூறுகின்றன, சூரன் ஆண்டது ஈழமண் என்று சிலரும், அது பிறிதொரு உலகமென்று வேறு சிலரும் கூறுவர். சரியான வரலாற்று ஆவணங்கள் இது பற்றி இல்லாததால் இது பற்றிய விவாதத்தைப் பெரிதுபடுத்துவதில் அர்த்தமில்லை. புராணக்கதைகள்எப்போதும் தத்தமது மதங்களின் பிரசார சாதனமாகவே அன்று பயன்படுத்தப்பட்டுவந்துள்ளன மக்களைநம்ப வைக்கவேண்டும் என்பதற்காக ஒரு இனத்தையோ அல்லது மதத்தையோ கற்பனைக்கு அம்பாற்பட்ட விதத்தில் உயர்த்தியும், மற்றைய இனத்தையோ அல்லது மதத்தையோ மிகவும் கேவலமாகத் தாழ்த்தியும் இவை பிரசாரம் செய்துள்ளன. கம்பராமாயணம் இதற்கு நல்ல உதாரணமாகும். ஒருசிறியசம்பவத்தை வைத்துக்கொண்டு பல கற்பனைச் சம்பவங்களைப் பின்னிப் பிசைந்து தருவதில் அன்று எந்தச் சமயங்களும் பின்நிற்கவில்லை. அதிலும் ஆரியக் கருத்துக்களை வலியுறுத்துவதில் ஆரியர் கையாண்ட கற்பனைக்கு அப்பாற்பட்ட கதைகள் ஏராளம்.

> [ புராணக் கதைகள் எப்போதும் தத்தமது மதங்களின் பிரச்சார சாதனமாகவே அன்று பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. மக்களை நம்ப வைக்க வேண்டுமென்பதற்காக ஒரு இனத்தையோ அல்லது மதத்தையோ கற்பனைக்கு அப்பாற்பட்ட விதத்தில் உர்யத்தியும், மற்றைய இனத்தையோ அல்லது மதத்தையோ மிகவும் கேவலமாகத் தாழ்த்தியும் இவைப் பிரச்சாரம் செய்துள்ளன. கம்பராமாயணம் இதற்கு நல்ல உதாரணமாகும் ]

இலங்கை வரலாறு துவாபாயுகத்தின் இறுதிக்காலத்தில் 'எலியட்' பண்டிதர் என்பவரின் கூற்றுப்படி 11481 [பதினெராயிரத்து நானூற்றி எண்பத்தொன்று] ஆண்டுகளுக்குமுன் சூரன் ஆட்சி செய்ததாகவும், இதன் காரணமாக ஈழநாட்டில் துவாபாயுகத்தில் தமிழினம் வாழ்ந்துள்ளது என்பதுடன் குமரிநாடு கடல்கோளினல் அழிவுற்ற காலம் சூரனின் ஆட்சிக்கு முற்பட்டதாக இருக்கலாம் என்றும் ஈழநாடு ஆராய்ச்சி [பக்கம் - 24] வரலாறு என்ற நூல் கூறுகிறது. ஆனல் பெரிய அளவில் புகழ்பெற்ற வரலாற்ருசிரியர்கள் பெரும்பாலும் இதுபற்றி மௌனமே சாதித்துள்ளனர், அத்திலாந்திச் சரித்திரம் எழுதிய 'எலியட்' என்னும் ஆங்கிலேயர் இற்றைக்கு 11481 [பதினெராயிரத்து நானூற்றிஎண்பத்தொன்று]' ஆண்டுகளுக்கு முன்னர் ஓர்கடற்கோள் நடைபெற்றதாகவும், அதனல் பல தீவுகள், கடற்கரை நாடுகள் சிதைவுற்றன என்றும்கூறுவர்.

## சூரன் யார்?

இக்கடற்கோளே சூரன் ஆட்சி முடிவில் நிகழ்ந்த கடற்கோளாகஅமையலாம் என்று ஈழநாட்டு ஆராய்ச்சி வரலாற்று [பக்கம் 21] நூல் மூலம் எழுதப்பட்ட விடயத்தை மட்டும் தனியாக வைத்து, சூரன் ஈழத்தில் ஆண்டான் என்ற கருத்தை முற்றுமுழுதாக ஏற்க முடியாது.

## இராவணன் காலம்

இராவணன் என்ற தமிழ் மாவீரனும் ஈழத்தில் அல்லது இலங்காபுரியில் ஆட்சி செய்ததாக சில வரலாறுகள் கூறுகின்றன. கம்பராமாயணமே இதுபற்றிக் கூடுதலாகக் கூறியுள்ளது. ஆனல் நம்மிடையே உள்ள சங்க இலக்கியங்களில் எந்த ஒன்றிலும் இலங்கையையும் இராவணனையும் தொடர்புபடுத்தும் குறிப்பு எதுவுமுல்லை. [ஆதாரம்: கோணேஸ்வரம் செ. குணலிங்கம் பக்கம்-8]

கம்பராமாயணக் காலத்தின் பிற்பாடே இராவணனையும்இலங்கையையும்தொடர்புபடுத்தும் கதைகள் அதிகமாயின என்று திரு, குணசிங்கம் அவர்கள் வலியுறுத்துகிருர். இராமாயணம் கூறும் யுத்த நிகழ்ச்சிகளில் எத்தகைய தூரம் உண்மை இருக்கிறது என்பதற்கு ஆதாரம் வலுவானதாக இல்லை. இந்தியாவில் ஆரியமயமாக்கம் தீவிரமாக நடைபெற்றகாலத்தில் நிகழ்ந்த சம்பவங்களை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டிருப்பதால் இராமாயணக் கதையில் ஆரியப் பிரசாரமே தலைதூக்கி நிற்பதை அவதானிக்கலாம்.

இராமனைக்கடவுள்போலவும் இராவணனை அரக்கன்போலவும் மட்டுமல்ல, ஈழமண்ணிலுள் தமிழரை (திராவிடரை) யும் அரக்கராகவே இராமாயணம் சித்தரிக்கிறது. இந்தியாவில் கி. மு. 2000(இரண்டாயிரம்) ஆண்டளவில்வந்திறங்கிய ஆரியமானது அங்கு உன்னத உயர்ந்த நிலையிலிருந்த திராவிடத்தைத் துரத்தத்தொடங்கியது. தென்னிந்தியாவரையும் ஆரியமும், திராவிடமும் அஞ்சலோட்டம் நடத்திய காலப்பகுதியே இராமாயணத்

[6ம் பக்கம் பார்க்க]

மு. வே, யோ. வாஞ்சிநாதன்

ஆடிப்பூரத்திருநாளில் கன்னிகையாத்திகழ்ந்தவளே

வண்ணையம்பதி நாயகியே சரணம்

யாழ். நுகர்வோர் காட்சியகம்

யாழ். கண்ணாடி நிலையம்

கே. கே. எஸ். வீதி, : : : யாழ்ப்பாணம்.

[ஏ 5448]

## சிறு கதை

# புதிய சிறகுகள்

ஆதிலட்சுமி சிவகுமார்

ஒரு சாவீடு நடந்து முடிந்ததுபோல வீடு சோகமாய்க் கிடக்கிறது. பொருட்களெல்லாம் போட்டபோட்ட இடத்தில்..அம்மா பாயின்றிவெறும் தரையில் சுருண்டபடி கிடக்கின்றாள். அவள் கண்களில் கண்ணீர் காய்ந்து வரிவரியாய்க் கிடக்கின்றது........

''இந்த மூன்று நாளைக்கை அம்மா இப்படி சுருண்டு போனாளே?.........அந்தக் கோசலை இராமனை காட்டுக்கு அனுப்பிவிட்டு எப்படி இருந்தாளோ! எனக்குள் சிந்தனை விரிகிறது.

எழுந்து முற்றத்துக்கு வருகிறேன்........

நேற்றிரவு பெய்த மழையில் முற்றத்து மாமரத்தின் இலைகளும்.........பூக்களும் .........பிஞ்சுகளும் சொரிந்து கிடக்கின்றன...............சாடிக்குள் நின்ற சின்ன சின்னக் குரோட்டன்கள் சிலிர்த்தபடி சிரிக்கின்றன.........

''என்ன இருந்தாலும்...... அம்மா பெத்தவள். அவளுக்கு கவலையாகத்தானே இருக்கும்''.........படலையைத் திறந்துகொண்டு பெரியமாமாவும் மாமியும் வருகிறார்கள்.........வயது அறுபதாகியும் மாறாத முரட்டுத்தனம் மாமாவின் தோற்றத்தில்...... மீசையையும் அவரின் கண்களையும் பார்த்தால் சின்னக் குழந்தைகள் அலறிவிடும்.

மாமாவையும் மாமியையும் கண்டவுடன் அம்மா வீச்சலெடுத்து அழுகிறாள்......

அண்ணன் வீட்டைவிட்டு போனதைக்கூட என்னால் தாங்க முடியாது.... ....... ஆனால்...... இந்த அம்மா இப்படி அழுது வடியிறதை என்னாலை தாங்கமுடியேல்லை... அம்மா அழும் ஒவ்வொரு தடவையும என் இதயம் கரைந்து வடிகிறது.........

''அக்கா அழாதே.........''

மாமா அம்மாவின் முதுகைத் தடவி.........கன்னங்களில் வடியும் கண்ணீரைத் துடைக்கிறார்.

மாமி கண்ணீர் வராத கண்களைத் துடைத்துக்கொண்டிருக்கிறா ........

''எங்கை அத்தானைக் காணேல்லை.........''

''அவர்தானே இப்ப மூண்டு நாளாக எல்லாக் காம்புகளுக்கும் ஓடித்திரிகிறார்.........''

''என்னவாம் சொல்லுறான்கள்?.........'',

தின்னவேலியிலை கேட்டதுக்கு அங்கை வரேல்லை எண்டு சொல்லிபோட்டினமாம்.........

கச்சேரியடியிலை,விசாரிச்சுப் போட்டுச் சொலுறம் எண்டவையாம்............அதுதான் போட்டார்......''

அம்மா அழத் தொடங்கினாள்......

மாமா மௌனமாகச் சிறுகணம் யோசித்துவிட்டுச் சொன்னார்......

''பிள்ளையள் எங்கை போகுதுகள் வருகுதுகள் எண்டு கவனிக்கவேணும் ..... அத்தான் பிள்ளையளை அவரவர் எண்ணத்துக்கு விட்டுட்டு இப்ப வீணா அலைஞ்சு திரியிறார்......''

''உவன் உப்படிச் செய்வானெண்டு ஆர் நினைச்சது......'' அம்மா மீண்டும் அழத்தொடங்கினாள்......

மாமாவுக்கும் மாமிக்கும் தேநீர் வைப்பதற்காக அடுப்படிக்குள் போகிறேன்... ..

நேற்றுப் பின்னேரம் துரையன் கடையில் வாங்கிய பாண் காய்ந்து கிடக்கிறது......

கேத்திலைக் கழுவி அடுப்பிலேற்றி எரிக்கிறேன்......!

''அக்காவுக்கும் தேத்தண்ணி கொண்டாமேனை...'' மாமாசொல்ல......

''எனக்கு ஒண்டும் வேண்டாம்......'' அம்மா ஓவென்று அழுகிறாள்......

மாமிக்கும் மாமாவுக்கும் நடுவில் தேநீரை வைத்துவிட்டு அகல்கிறேன்......

''அண்ணனின் அறையில் அவன் கழற்றி வைத்துவிட்டுப் போன மோதிரமும் மணிக்கூடும் அப்படியே கிடக்கிறது......அவன் தினமும் உடுக்கும் சாரம் கட்டிலில் கிடக்கிறது......அவன் படிக்கும் புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன...... அவன் நன்றாகச் சிந்தித்துத் தான்போயிருக்கிறான்.......... இதற்குமேல் என்ன ஆதாரம் வேண்டும்?......

அண்ணன் நல்லவன். ஒரு நாள்கூட சந்தியிலோ மதவிலோ நின்று வம்பளந்தவனில்லை...தெருவால் போகும் பெண்களுக்கு பகிடி விட்டவனில்லை. என் கண்களிலும் கண்ணீர் உறுமாப்போல்......

''சீ...என்ன இது?......என்ர அண்ணன் எடுத்த முடிவு சரிதானே............''கண்களைத் துடைத்துவிடுகிறேன்......... என்னை உறுதிப்படுத்திக் கொள்கிறேன்.........

அம்மா களைத்துச் சோர்ந்தவராய் உள்ளே வருகிறார்...... தலைமுடி கலைந்து...கன்னங்கள் ஒட்டி அவரைப் பார்க்க பாவமாக இருந்தது......

''தம்பியைக் கண்டனீங்களேயப்பா......''

அம்மாவின் ஏக்கங்கலந்த எதிர்பார்ப்பு அப்பாவை வாயடைக்கச் செய்துவிடுகிறதுபோலும்.

தலையைத் தொங்கப் போட்டபடி......... கதிரையில் அமர்கிறார்......

''என்னவாமத்தான் சொல்லுறான்கள்?...... மாமா கேட்டார்.

''றெயினிங்குக்கு அனுப்பிப் போட்டினமாம் ......... முடிய வீட்டைவர விடுவினமாம்...''

அம்மா பரிதாபமாக அழுகிறார்......அம்மாவின் குரல் நெஞ்சத்தைக் கசக்கிப் பிழிகிறது......

''உவனை நம்பித்தானே இந்தப் பொம்பிளைப் பிள்ளையையும்......இனி இதை நான் என்ன செய்ய''

அனேகமான அம்மாக்களைப் போல...ஆண்பிள்ளையை முதலீடாய் எண்ணும் அம்மாதான் இவளும் என்பது எனக்கு வேதனையளிக்கிறது...

''வெய்யில் எல்லாம் திரிஞ்சு நாக்கு வறண்டு போச்சு... எப்பன் தண்ணி கொண்டு வா பிள்ளை......''

இவ்வளவு நேரமும் அப்பாவுக்கு ஒன்றும் குடிக்க கொடுக்கவில்லையே என்ற குற்ற உணர்வோடு உள்ளே போகிறேன் .. ...அம்மாவின் விக்கல் இடையிடையே கேட்கிறது......

''நான் என்னால் ஆனதெல்லாம் செய்திட்டன்... இனி அவன் விரும்பினா வரட்டுக்கும்........இல்லாட்டி....''

நான் கொடுத்த தேநீரை அப்பா வாங்கிக்கொண்டார்.



''நான் ஒருநாள் கவலைப்பட...நான் தங்கச்சியப்பாப்பனம்மா... நீ ஒண்டும் கவலைப்படாதை...'' எண்டவன்... இண்டைக்கு இப்பிடி செய்திட்டானே...''

''ஏதோ நடக்கிறது நடக்கட்டும்...இனிநான் அவனைத் தேடி அங்கை இஞ்ச எண்டு திரியமாட்டன்'' ...... அப்பா தெளிந்துவிட்டது மாதிரித் தோன்றியது......

''அப்ப நாங்கள் போட்டு வாறம்... பெடியனைப்பற்றி அறிஞ்சால் வந்து சொல்லுறம்...'' மாமா எழுந்தார்.

''தின்னாம உண்ணாமக் கிடந்து காயாமல் .. சாப்பிடுங்கோ மச்சாள்...பிறகுவருத்தம் துன்பம் எண்டு வந்தால் உலையேலாது...''

மாமியும் விடைபெற்றாள்.

அப்பா இப்போது தன்னை ஸ்திரப்படுத்திக்கொண்டு வேலைக்கு போகத் தொடங்கிவிட்டார். அம்மாவும் மெல்ல மெல்ல வீட்டுவேலைகளில்......

புத்தகம் கொப்பிகளை மேசையில் வைத்துவிட்டு அமர்கிறேன். மாமரத்தில் மோதி... சிதறிவரும் காற்று என்னைத் தடவிச் செல்கிறது .. அணிற்பிள்ளை ஒன்று கொப்பில் தாவி ஏறுவதும்...... சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு கீழே ஒளிவதுமாய் ... தனிமையில் விளையாடிக்கொண்டிருக்கிறது.

வாசலில் சுருண்டுகிடந்த நாய் வாலைச்சுருட்டிக்கொண்டு கேற்றை நோக்கி ஓடுகிறது.

ஆரைக்கண்டாலும் இந்தியனாமியைக் கண்டமாதிரி குலைக்கிற இது ஏன் இப்பிடி ஓடுது... ஆச்சரியத்துடன் எட்டிப் பார்க்கிறேன்.

ஒருகணம் அந்தஉணர்வுகளை என்னால் உருப்போடமுடியவில்லை. கேற்றடிக்கு எழுந்தோடிப்போய்... ''அண்ணை'' என்று அவனைக் கட்டிக்கொள்கிறேன்...

''அம்மா அண்ணன் வந்துவிட்டானணை......'' கத்துகிறேன்...அம்மா ஓடிவந்து ஒரு பாட்டம் அழுதுதீர்க்கிறாள்.

அண்ணனை விடுப்புப் பார்க்க அக்கம்பக்கத்து சனம் கூடுகிறது. அம்மா அழுதபடியே இருக்கிறாள்.

''ஏதோ கெட்ட காலம் பெடியனை மறைச்சுவைச்சிருக்குது...'' அம்மாவுக்கு யாரோ ஆறுதல் சொல்கிறார்கள்.

நான் அண்ணனருகே போய் ''அண்ணை றெயினிங் எல்லாம் முடிஞ்சுதே...இனி எப்ப பேசுக்குப் போறாய்?...'' என்கிறேன்.

''நான் இனிப்போகமாட்டேன்...''

''ஏனண்ணை...'' என்கேள்வி அதிர்ச்சி.

''நான் விட்டுவிட்டு வந்திட்டன். அம்மா சாப்பிடாமல் அழுதுகொண்டிருக்கிறா எண்டு அறிஞ்சன் என்னாலை அங்க இருக்கமுடியேல்ல..''

அப்பாவின்அலுவலகத்துக்கு அம்மாஆளனுப்பினாள். நேர்த்திக்கடன் முடிக்க துரையன் கடையில் பொருட்கள் வாங்கிக் குவித்தாள்.

''பதினைஞ்சு நாளையில் பொடியன் வருவானெண்டு வேலுப்பிள்ளைச் சாத்திரி சொன்னதுஉண்மைதானே..'' அம்மா பூரித்து மகிழ்ந்தாள்.

மதவடிப் பிள்ளையாருக்குப் பெரிய பொங்கல். மாட்டு வண்டியில் சருவம், விறகு, வாழைக்குலை, இளனிக்குலை... என்று எல்லாமே ஏற்றியாகிவிட்டது.

''பிள்ளையும் வந்தால் உதவியாயிருக்கும்...'' மாமி கேட்க அம்மா மாமியின் காதில் ஏதோ சொல்கிறாள். மாமி என்னைப் பார்த்தபடி தலையாட்டுகிறாள்.

புதுவேட்டிகட்டி அண்ணனும் புறப்பட்டுவிட்டான்.

நான் திண்ணையில் வந்து அமர்கிறேன். இரவு முழுவதும் கேட்ட எறிகணைச் சத்தங்கள் நினைவுக்கு வருகின்றன. பயங்கரமாய் மனது அதிர்கிறது. மேகத்தின் முகட்டுக்குள் ஏதோ அதிர்வது போல...

நேற்றைக்கு எவ்வளவுதுணிவாய் ஊருக்குள்ளை ஆமிவந்து வயலுக்கை வேலைசெய்ததுகளை பிடிச்சுக்கொண்டுபோட்டான்?...''

''புல்டோசராலை சனங்களின்ரை வீடுகளையும் இறக்கிப் போட்டானாம்...''

எழும்பிஉள்ளேவருகிறேன்.. எனது புறப்பாட்டை உணர்ந்த என் அணிகலன்களைக் கழற்றி அம்மாவுக்குத் தெரியும்படியாய் வைக்கிறேன்...

''என்னம்மா உது ..'' திரும்பினால் வாசலில் அப்பா.

''அப்பா...எனக்கு வார்த்தைகள் வரமறுத்தன.

''டிசம்பரிலை சோதினை வருது ..உனக்குத்தான் நல்ல றிசல்ட் வரும் எண்டு பிறின்சிப்பல் சொன்னார்...''

''இல்லையப்பா .........நான் சோதனை எடுக்கேலை...நான் சோதனைக்கு படிச்சுக்கொண்டிருந்தா ..ஆமி பள்ளிக்கூடத்துக்கை வந்திடுவானப்பா...''

''அப்ப...''

''நான் அக்காக்களோடை போகப்போறன்... நான்போறதுக்குசிந்தித்துக்கொண்டிருக்க அண்ணா போனான்... குடும்பத்திலை ஒராள் போனாலேபோதும் எண்டு நினைக்க அவன் வந்திட்டான்...'' அப்பாவை நிமிர்ந்து பார்த்தேன்.

''படிப்பும் உழைப்பும் கலியாணமும் எண்டிருந்தா எங்கட ஊருக்குள்ளையும் ஆமி வருவான்... பிறகு அவனைக் கலைக்க பெரிய இழப்பைச் சந்திக்கவேணும்... அதிலும் பார்க்க. .ம்...

''நான் உணர்ச்சிவசப்பட்டுப் போகேல்லை ..''

சென்றுவா என்று வழியனுப்ப முடியாவிட்டாலும்... போகாதே என்று அவர் தடுக்கவும் இல்லை.

வெளியே வருகிறேன் . படலையைத் திறந்து வெளியே வர...எனக்குச் சிறகு முளைத்த மாதிரி இருந்தது.

(யாவும் கற்பனை)

உண்மைச் சம்பவம்

# 3000 ராணுவம் சூழ்ந்து கொண்டது

# கடவுள்தான் என்னைக் காப்பாற்றினார்

மூவாயிரத்துக்கு மேற்பட்ட இராணுவத்தினரும், 19 இராணுவ கவச வாகனங்களை உள்ளடக்கிய இராணுவ அணி ஒன்றிடம் சிக்கிய 21 வயது பாடசாலை மாணவன் ஒருவர் தெய்வாதீனமாக உயிர்தப்பிய சம்பவம் ஒன்று அண்மையில் சண்டிலிப்பாய்ப் பகுதியில் நிகழ்ந்துள்ளது.

வலி-மேற்குப் பகுதியில் இராணுவத்தினர் நிகழ்த்திவிட்டு ஓடிப்போனஅழிவுகளைப் பார்வையிடச் சென்றபோது தற்செயலாக மேற்படி மாணவனைச் சந்தித்தேன்.

எஸ். சிறிபவன் என்றஇந்த மாணவன் மானிப்பாய் இந்துக்கல்லூரியில் உயர்தர வகுப்பில் கல்வி கற்றுக் கொண்டிருக்கின்றார். சண்டிலிப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகக்கொண்ட இம்மாணவன் தனக்கு ஏற்பட்ட பயங்கர நிகழ்வை பின்வருமாறு விபரித்தார்.

''இம்மாதம் 9-ந் திகதி காலை 5-30 மணியளவில் 'இராணுவம் வருகின்றது' எனக் கூறியபடி மாகியப்பிட்டிப் பகுதியில் இருந்து

தேவா

ஒருசில பொதுமக்கள் எமது வீட்டைத் தாண்டி ஓடினார்கள். அண்மைக்காலமாக மக்கள் இப்பகுதியிலிருந்து இராணுவம் வருகின்றது என கூறிக்கொண்டு பயத்தில் ஓடுவது வழக்கம். இதனால் நாம் அதை இம்முறையும் பெரிதாக எடுக்கவில்லை. வழக்கம் போல் காலை 6 மணிக்கு முன்பாக எனது தாயாரும், சகோதரியும் மானிப்பாய் மருதடி கோவிலுக்குச் சென்றுவிட்டனர். காலை 8 மணியளவில் சண்டிலிப்பாய் செயலர் பிரிவில் வேலை செய்வதற்காக எனது தந்தையாரும் எனது வளவின் பின்பக்கமாக உள்ள பாதை வழியாகச் சென்றுவிட்டார்.

நான் வீட்டை பூட்டிவிட்டு வீதிக்கு வந்தபோது திகைப்படைந்து நின்றுவிட்டேன். மூவாயிரத்துக்கு மேற்பட்ட இராணுவ அணியொன்று

]6-ம் பக்கம் பார்க்க]

வண்ணை சிவன் தேவஸ்தான
தையல் நாயகி அம்பாள்
அம்மா உன் அருளால்
தமிழர் துயர் நீங்க வேண்டும்

ஸ்ரீ தாமோதரவிலாஸ் சைவ உணவகம்
403, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்,
]ஏ 5137]

# போர்முனை டாங்கிகள்

நடமாடும் இரும்புக் கோட்டை ஒன்றைத் தயாரித்து அதை ஓர் போர் சாதனமாக உபயோகிக்கலாம் என்ற எண்ணத்தோடு இப்பொழுது 83 ஆண்டுகள் ஆகின்றன. 1913ல் பிரிட்டிஷ் இராணுவ அதிகாரியான கப்டன் எம். ஜே. பூலர்தான் இந்த யோசனை வெளியிட்டார். அப்போது சமாதானமாக இருந்தமையால் இது பற்றி பிரிட்டிஷ் பாதுகாப்பு இலாகா உரிய கவனம் செலுத்தவில்லை.

பூலர் இந்த யோசனையை தெரிவித்த சில மாதங்களிலே 1914 ஆகஸ்ட் 4-ந் திகதி முதலாவது உலகமகாயுத்தம் ஆரம்பமானது. அப்பொழுது இராணுவ அதிகாரியான லெப்டினன்ட் கேணல் ஸ்வின்டன் நடமாடும் இரும்புக் கோட்டைதயாரிப்பதன் அவசியத்தை வலியுறுத்தியதோடு அவற்றை இயக்குவதற்கு சங்கிலிச் சக்கரங்களை (Cnains-wheels) பயன்படுத்தலாமெனவும் யோசனை தெரிவித்தார். அவர் கூறிய யோசனை அடிப்படையில் பிரிட்டிஷ் இராணுவ பொறியியலாளர்கள் பலர் இதுசம்பந்தமான ஆராய்ச்சியை உடன் ஆரம்பித்தனர்.

இந்த ஆராய்ச்சி பூர்த்தியானதும் முதல் நடமாடும் இரும்புக்கோட்டை போர் முனையில் செயலாற்றத் தொடங்கும்வரை இதுபற்றி யாருக்கும் எந்தச் செய்தியும் ''கசி''யக்கூடாதென பரம இரகசியமாக இதனைச் சாதிக்க வேண்டுமென பிரிட்டிஷ் இராணுவம் கருதி செயல்பட்டது.

இதனுல் இந்த ஆராய்ச்சியை மூடிமறைப்பதற்கு பொய்யான செய்தி ஒன்றை அது வெளியிட்டது. எந்த நிலையிலும் ''ஒழுகாத தண்ணீர் தொட்டி ஒன்றை'' (Tank) நிர்மாணிக்கப்பட்டு அந்த இராணுவ பொறியியலாளர்கள் முயற்சி செய்து வருவதாக செய்தியை வெளியிட்டனர்.

இதனுல் பிரிட்டிஷ் மக்கள் அதை ஒரு வகை ''புது தண்ணீர் தொட்டியென்றே'' நினைத்தார்கள். இதனுல் இதை ''டாங்கு'' என்று அழைத்தால் தவருக அவர்

**ஸச்சி**

கள் அன்று இட்ட பெயரே இன்றும் இரும்புக்கோட்டைக்கு ''டாங்கு'' என்றே அழைக்கப்படுகின்றது.

பிரிட்டனில் தயாரான தனது முதல் டாங்கை 1916 பெப்ரவரி 8-ந் திகதி முதல் முதலாக பிரிட்டன் போரில் ஈடுபட்டது. இந்த முதல் டாங்கிக்கு ''லிட்டில் வில்லி'' என்ற பெயரிடப்பட்டது. ஆனுல் இந்த ''லிட்டில்வில்லி'' போர் நடவடிக்கைகளுக்கு சிறந்ததாக இல்லையென 'பிக் வில்லி' (Big Wiliy என மற்ெருரு டாங்கியை தயாரித்தனர். அதில் 10 இராணுவ வீரர் தாங்கி செயல்பட வசதி செய்யப்பட்டது.

இரண்டாவது உலக மகா யுத்தத்தின் பின் அமெரிக்காவும் சோவியத் ருசியாவும் டாங்கிகள் உற்பத்தியில் முதன்மையடைந்தன. இப்பொழுது டாங்கிகளில் பிரதானமாக மூன்று ரகங்கள் உள்ளன. லேசான டாங்கிகள், நடுத்தர டாங்கிகள், கனமான டாங்கிகள் என்பனவாகும். லேசான டாங்கிகள் எங்கும் எடுத்துச் செல்லவும், மலைப்பிரதேசங்களில் ஓட்டக்கூடியதாகவும் அதி வேகமாக செயல்படக்கூடியது.

நடுத்தர டாங்கிகள் சாதாரண யுத்த நடவடிக்கைகளுக்கு மிகுதியாகப் பயன்படுத்தப்படுகின்றன. கடினமான டாங்கிகள் அதிசக்தி வாய்ந்தவை. எந்தவித தாக்குதலையும் சமாளிக்கக்கூடியவை. ஆனுல் அவை மெதுவாகவே நகர்ந்து செல்லும்.

அமெரிக்க இராணுவ ஜெனரல் எஸ். பாட்டன் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட பாட்டன் டாங்கி பிரசித்தமானது. இதில் எம். 47, எம். 60, எம். 113 என தனிரகங்களுக்கு, இதிலுள்ள பீரங்கிகள் 12 மைல்தூரம் குண்டுகளைச் சுடும் ஆற்றலுண்டு. இதிலிருந்து சீறிப்பாயும் குண்டுகள் விநாடிக்கு 3000 அடி செல்லும். அமெரிக்காவின் மற்ெருரு தயாரிப்பான ஷெர்மன் டாங்கியும் பிரசித்தமானவை. இப்பொழுது தென்னுபிரிக்கா' செக்கோசிலவாக்கியா, இந்தியா, டாங்கிகள் உற்பத்தியில் முன்னணியிலுள்ளன.

# பெண்கள் உலகம்

## பர்மிய மக்களின் நம்பிக்கையின் சின்னம் சூ-கி

சமாதானம், சகோதரத்துவம், ஒருமைப்பாடு, சம உரிமை என்றெல்லாம் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை அழகுற அலங்கரித்த ஒருவர் பதவிக்கு வந்தவுடன் தனது மக்களுக்கே விசுவாசமற்றவராக 'உண்மை' யோடு நடந்துகொள்ளமுடியாதவராகச் செல்வாக்கிழந்துகொண்டிருக்கின்ற அவலத்தைக் கண்கூடாகக் காணுகின்றபோது, மியான்மரில் தனது மக்களுக்காகவே சிறைவாசம் அனுபவித்துக்கொண்டிருந்த ஆங் - சான் - சூ - கி என்ற வீரப் பெண்மணியைப் பற்றி ஒரு தரமல்ல, பல தடவைகள் மனம் நினைக்கவே செய்கிறது.

'மியான்மார்' என அழைக்கப்படும் பர்மாவிலே இராணுவ ஆட்சியாளர்களால் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ள ஆங்-சான்-சூ-கி என்ற பெண்மணி 1990 மே மாதம் அங்கு நடந்த பொதுத் தேர்தலில்- அந்நாட்டின் தலைவியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனுலும் ஆட்சிப் பொறுப்பு இன்னமும் இவரிடம் ஒப்படைக்கப்படவில்லை.

தனது குடும்பத்தினர் உட்பட எவருடைய தொடர்புமின்றித் தனிமையில் வீட்டுக் காவலில் வாடிக்கொண்டிருந்த சூ-கியின் வரலாறு, பெண்ணினம் முழுவதுக்குமே பெருமை தேடித் தரக்கூடிய ஒன்று.

பர்மிய தேசத்தின் சுதந்திரச் சிற்பி என அழைக்கப்படும் ஓங்-சான் என்னும் தலைவர், பிரித்தானிய ஏகாதிபத்தியத்திடமிருந்து பர்மாவை விடுவிக்க அயராது உழைத்துக்கொண்டிருந்த போதுசுதந்திரம் கிடைப்பதற்கு ஆறு மாதங்களுக்கு முன்னர் படுகொலை செய்யப்பட்டார். இந்த விடுதலை வீரரின் மகள்தான் சூ-கி.

சூ-கியின் தேசப்பற்றும், தந்தையின் இலட்சியங்களை நிறைவேற்ற வேண்டும் என்ற உறுதிப்பாடும் சேர்ந்து— பர்மாவின் ஜனநாயகம் வேண்

**சித்தாரா**

டிய போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் நிலைப்பாட்டை இவரிடம் தோற்றுவித்தன.

சுதந்திரம் பெற்ற நாடாக இருந்தபோதும், இராணுவ ஆட்சியாளரின் கொடூர அடக்குமுறைகளுக்கு எதிராகப் பர்மிய மக்கள் போராட வேண்டி இருந்ததை மற்ெருரு சுதந்திரப் போராட்டம் எனவே சூ-கி நினைத்தார். இராணுவ ஆட்சியாளரிடம் மண்டியிட்டு நிற்க விரும்பாத இந்த வீராங்கனையின் செயல் திறனைக் கண்ட மக்கள் தமக்கு ஒரு சிறந்த தலைமைத்துவம் கிடைத்துவிட்டதை எண்ணிப் பெருமிதம் அடைந்தனர். அந்த மக்களின் நம்பிக்கைக்குரியவராய் சூ-கி என்ன கருத்துக்களைச் சொல்லி என்ன செய்யவேண்டும் எனப் பேசினுரோ, அதே போலவே தனது சொந்த வாழ்க்கையிலும் வாழ்ந்து காட்டி, ஒரு சிறந்த தலைமைக்குரிய பண்பை வெளிப்படுத்தினுர்.

சூ-கியின் பின்னுல் வெள்ளம் போலத் திரண்டிருந்த மக்களைக் கட்டுப்படுத்தமுடியாத நிலையில் பர்மிய இராணுவ அரசு சூ-கியைக் கைதுசெய்து தடுப்புக் காவலில் வைத்தது. சூகியைக் கைதுசெய்வதால் மக்கள் எழுச்சியை அடக்கி விடலாம் என இராணுவ ஆட்சியாளர் நினைத்தனர். ஆனுல் மாருக சூ-கியினதும் அவரது

(7ம் பக்கம் பார்க்க)

## 3000 இராணுவம்

]15-ம் பக்கத் தொடர்ச்சி]

அங்கு நிற்பதைக் கண்டேன். முன்னுக்கு நின்ற இராணுவ அதிகாரி ஒருவர், ஓடிவந்து என் கையையும், கழுத்தையும் பிடித்துக்கொண்டார். நான் உடனே ''பாடசாலை மாணவன் நான்'' என்று அவரிடம் கூறினேன், அவர் என் கால்சாட்டைப் பையில் இருந்த தேசிய அடையாள அட்டையைப் பறித்து எடுத்துக்கொண்டு, எமது வீட்டு மதில் சுவருடன் என்னை இரு கைகளையும் உயர்த்தியபடி சாய்ந்து நிற்கும்படி ஆங்கிலத்தில் உறினுர். ஒரு சில வினுடிக்குள் என் கதை முடியப்போகின்றது என்ற நடுக்கத்துடன் அவர் கூறியபடி கைகளை உயர்த்தி கண்களை மூடியவாறு அசையாது நின்றேன்.

திடீரென என்முன்னுல் ஒரு ஜீப் வண்டி வந்து நின்றது. அதில் சாரதியும் ஒரு அதிகாரியும் மட்டுமே இருந்தார்கள். அந்த அதிகாரி, ஒரு வினுடி மட்டும் என்னைப் பார்த்து விட்டு மறுபக்கம் பார்த்து 'மூவ்' (Move) என ஆங்கிலத்தில் உரக்கக் கத்தினுர். உடனே அங்குநின்ற இராணுவத்தினர் அனைவரும் எமது வீட்டுக்கு முன்னுலுள்ள ஒடுங்கிய பாதை ஊடாக மெல்லமெல்ல ஓடினுர்கள். அனைவரும் துப்பாக்கி வைத்திருந்தார்கள். இடையிடையே சிலர் பாரிய அராணுவ ஆயுதங்களை முதுகிலும், தோழிலும் சுமந்தவண்ணம் சென்றனர். பெரும்பாலான இராணுவத்தினர் என்னைத் தாண்டிச் செல்லும்போது சிங்களத்தில் ஏதோ சொன்னுர்கள். எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. இராணுவத்தினர் அனைவரும் அந்த சிறியபாதை ஊடாக சென்றதும் இவர்களுக்கு பின்னுல் அணிவகுத்து நின்ற 19 இராணுவ கவச வண்டிகள் என்னைத் தாண்டிச் செல்லும்போது என்முன்னுல் ஜீப் வண்டியில் எழுந்துநின்ற இராணுவ அதிகாரியைப் பார்த்து 'மரியாதை' செலுத்தியபடியே சென்றனர். இராணுவ வாகன அணி சென்றதும், என் முன்னுல் ஜீப்பில் நின்ற அதிகாரியும் தனது ஜீப்வண்டியை அந்தப் பாதை ஊடாக செலுத்தும்படி சாரதிக்கு கட்டளையிட்டார். நான் நிற்பதைப்பற்றி அந்த அதிகாரி சிறிதும் பொருட்படுத்தாது சென்றுவிட்டார்,

பயத்தினுல்திகைப்படைந்து அசையாது நின்ற நான், வீதியின் இரு பக்கங்களும் பார்த்தேன். எந்த ஒரு இராணுவமுமின்றி வீதி வெறிச்சோடிக் கிடந்தது. உடனே நான் என் வீட்டின் சுவரின் மீது ஏறி எங்கள் வீட்டின் பின் பாதை ஊடாக என் கால்கள் போனபோக்கில் ஓடினேன். ஈற்றில் சீரணிச் சந்தியில் எனது பாடசாலை நண்பர் ஒருவரைச் சந்தித்து, அவரின் உதவியுடன் சைக்கிளில் மானிப்பாய் மருதடிக்கு வந்தபோது என் தாயாரையும் சகோதரியையும் சந்தித்து நடந்தவற்றைக் கூறினேன். என் தாயார் என்னை அணைத்தபடி மருதடி கோவிலினுள் சென்று கற்பூரம் கொழுத்தினுர். எமது குடும்பம் தற்போது கல்வியங்காட்டில் இடம்பெயர்ந்துள்ளது'' என்று கூறினுர்.

## அந்தச் சின்னக்கிராமமும் அதை அடுத்த, வயல்வெளியும்

ஓ ...
''அந்தச் சின்னக் கிராமமும்
அதை அடுத்த வயல் வெளியும்''
பார்த்தாலே மனம் பூத்து விடும்...
ஓலைச்குடிசை முதல்
ஓங்கிய மாடிகள் வரை
ஓரமாக வீற்றிருக்கும்..
பக்கத்து வயலில் பயிர்
செழித்திருக்கும்....
பார்ப்பதற்கு மனம் களித்திருக்கும்...
குளம் குட்டை எங்கும்
மழை தேங்கி நிற்கும் — அதில்
குதித் தோடும் மீன்களிலும்
அழகிருக்கும்...

வீடுகள்... வீதிகள்...
கோவில்கள்... கோபுரங்கள்...
வயல்கள்... வாய்க்கால்கள்... என
நீண்டிருந்த அந்தக் கிராமம் — இன்று
நீள் துயிலில்...
மாண்டு கிடக்கின்றது...
ஆம்!
நிலமிருக்க நாம்
''நிலைதவறி'' நீண்டதூரம்
சென்று விட்டோம்
நீளம் பெரு வெளியில்
நிம்மதியாய் தானுறங்கி
நீண்டநாள் கழிந்துவிட்டது . ...

அந்தச்
''சின்னக் கிராமமும்''
அதையடுத்த ...
வயல்வெளியும் - இன்று
நெருஞ்சி முற் பற்றைகளால்
''முக்காடு'' போட்டு முகம்
மறைத்து நிற்கின்றது......

ஆக்கம்:
சோ. மதீசன்

எல்லையில்லா அருளை அள்ளித்தருபவளே
தொல்லைகள் தீர்ப்பாய் அம்மா
கணேஸ் சாரதி கடைச்சல் தொழிலகம் உரிமையாளர்: இ. சிவஞானம்
50, மானிப்பாய் வீதி, : யாழ்ப்பாணம். [ஏ 5147]

தையல்நாயகி அம்மா தமிழர்கள் இன்னல்
தீர உன் பாத கமலங்களில் பணிந்துவேண்டும்,
சிவன் உதிரி விற்பனைக்களஞ்சியம்
(SIVAN MOTOR STORES)
70/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
[ஏ 5139]

# ஜெனிவா மனித உரிமை மாநாட்டில் தேவாலய தாக்குதல்பற்றி பிரஸ்தாபம்

(கொழும்பு)

அரச படைகள் மேற்கொண்டுவரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் மகாநாட்டில் ஒன்றரை நாட்கள் தொடர்ச்சியாக விமர்சிக்கப் பட்டுள்ளது.

ஜெனிவாவில் கடந்த திங்களன்று கூடிய இந்த மகாநாட்டில் முதல் நாளும் அடுத்த நாளும் இலங்கை அரச படைகள் மேற்கொண்ட மனித உரிமைமீறல் சம்பவங்கள் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு விரிவாக ஆராயப்பட்டதுடன் இலங்கையிலிருந்து கலந்துகொண்ட பிரதிநிதிகளிடம் கேள்விகளும் கேட்கப்பட்டன.

'முன்னேக்கிப் பாய்தல்' இராணுவ நடவடிக்கையின் போது நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் தஞ்சமடைந்த பொதுமக்கள்மீது விமானப்படை மேற்கொண்ட குண்டுத் தாக்குதல் முக்கியமாக இம்மகாநாட்டில் ஆராயப்பட்டுள்ளது.

மற்றும் தென்பகுதி மர்மக் கொலைகள் தெற்குத் தமிழ் இளைஞர், யுவதிகள் அரச படையால் கைதாகல் போன்ற மனித உரிமைமீறல் சம்பவங்கள்பற்றியும் இந்த ஜெனிவா மகாநாட்டில் ஆராயப்பட்டது.

ஜெனிவாவிலுள்ள இலங்கைத் தூதுவர் பேர்னுட் குணதிலகவும் மற்றும் அதிகாரி ஒருவரும் இம்மகாநாட்டில் இலங்கைப் பிரதிநிதிகளாகக் கலந்து கொண்டனர். கி-சி

## மாலைதீவுக்கு இலங்கையிலிருந்து 'தண்ணீர்' ஏற்றுமதி

[கொழும்பு]

மாலைதீவு அரசாங்கம் இலங்கையிடமிருந்து குடிதண்ணீரை இறக்குமதி செய்யவுள்ளது.

இதற்கான ஒப்பந்தமொன்றை மாலைதீவு அரசு இலங்கை நிறுவனமொன்றுடன் செய்து கொண்டுள்ளது.

மலைநாட்டுப் பகுதியில் இயற்கை நீர்வீழ்ச்சிகளில் இருந்து சேகரிக்கப்படும் சுத்தமான குடிநீர் பிளாஸ்ரிக் புட்டிகளில் அடைக்கப்பட்டு மாலைதீவுக்கு ஏற்றுமதி செய்யப்படவுள்ளது.

கடலால் சூழப்பட்டுள்ள மாலைதீவின் பல குட்டித்தீவுகளில் குடிநீர்ப் பிரச்சனை பெரிதும் எதிர்நோக்கப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கி-சி

## அனுமதி அட்டைகள்

க.பொ.த. (உயர்தரம்) மாணவரின் அனுமதி அட்டை இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.00 மணிக்கு பாடசாலை ரீதியாக வழங்குவதற்கான சகல ஒழுங்குகளை அதிபர்கள் மேற்கொண்டுள்ளார்கள்.

சி

## ஈழக் கடற்பரப்பில்

[4ம் பக்கத் தொடர்ச்சி]

தின் காலமாகும்.

'பர்கிரர்' என்ற அறிஞர் கி. மு. 1100 (ஆயிரத்து நூறு)க்கு ஐந்து நூற்றூண்டுகளுக்கு முன்னர் இராமன் வந்தான் என்றும், கி மு. 1100ல் பாரதப்போர் நிகழ்ந்ததென்றும் எனவே கி.மு.1600 (ஆயிரத்து அறுநூறு) இராமன் ஆட்சி செய்தான்என்றும் கூறியுள்ளார்.

ஆனல் 'ஜகோபி' என்ற வரலாற்றுசிரியர் இராமன் காலமும், இராமாயணத்தின் காலமும் கி. மு. 800 (எண்ணூறு) க்கும் கி. மு. 600க்கும் இடைப்பட்டதாகும் என்று கூறுகிறுர்.

செவ்விதர்ம என்பவர் இராமாயணத்தின்காலம் திட்டவட்டமாகத் தீர்க்கப்படவில்லை என்று கூறி, ஜகோபி தெரிவித்த கருத்தை தற்காலிகமாக ஏற்கலாம் என்று கூறுகிறுர். (ஆதாரம்-கோணேஸ்வரம்-செ. குணசிங்கம் பக்கம் - 6)

அதுமட்டுமன்றி வால்மீகி இராமாயணத்தின் எந்த இடத்திலாவது, இராவணன் நமது இலங்கையரசன் என்ற குறிப்பை எழுதிவைக்கவில்லை. (ஆதாரம் - கோணேஸ்வரம் மே. கு. பக்கம்- 7) இவ் உண்மை இராவணன்பற்றிய கற்பனையில் இருப்பவர்களுக்கு கசப்பானதாக இருப்பினும் உண்மை எப்போதும் கசப்பானதே என்பதையும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். அதற்காகஇராமன்சிறந்தவன் தெய்வத்துக்குச் சமனுனவன் வெற்றிகொள்ள முடியாதவன் என்பது அர்த்தமல்ல; ஆரியப் பிரசார சாதனத்தின் கூர்மையினுல்தான் இராமன் உயர்த்தப்பட்டிருக்க வேண்டும். இதுதவிர இராமன்கதை நிகழ்ந்ததாகக் கூறப்படும் வெகுகாலத்திற்குப் பின்பே இராமாயணம் எழுதப்பட்டிருப்பதால் இடைக்காலத்தில் மக்களை வசப்படுத்தி, ஆரிய மாயைக்குள் விழவைக்கக் கூறப்பட்ட கட்டுக்கதைகளை வைத்தே, பின்நாளில் இராமாயணம் எழுதப்பட்டிருக்க வேண்டும். அனுமான் வாலினுல் இலங்காபுரியை எரித்ததையும், சஞ்சீவி மலையைத் தலையில் அல்லது தோழில் சுமந்துகொண்டு வந்ததையும் அறிவினைக் களமாகக்கொண்ட எந்த வரலாற்றுசிரியனும் நம்பத்தான்வேண்டும் என்பது, கட்டாயமா என்ன? எனவே இராமாயணத்தை முதன்மைப்படுத்தியும் இராமனை வானளாவ உயர்த்தியும், இராவணனை இகழ்ந்தும் அல்லது தாழ்த்தியும் சில இடங்களில் (அரக்கனென்று) எழுதிய கம்பனின் கற்பனை அபாரமானது, அலாதியானது. கம்பன் உண்மையிலேயே சிறந்த புலவன்தான். இதில் யாருக்கும் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. ஆனல் கம்பன் ஒரு உண்மையான சிறந்த, வரலாற்றுசிரியன் அல்ல என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

அறிஞர் 'கிபே' என்பவர் வால்மீகி இராமாயணத்தில் வரும் 'லங்கா'வானது 'நெர்புத்தா' ஆற்றைச் சுற்றியுள்ள சதுப்பு நிலமே என்று கூறிகிறுர்.

'வேதர்' என்பவர் தென் சமுத்திரத்தின் மத்தியில் காணப்பட்டதும், ராட்ஷஷத்தீவு என அழைக்கப்பட்டதுமான பெரிய தீவின் தலைநகரமே 'லங்கா' என்றும் இந்த லங்கா சம ரேகையில் அல்லது பூமியின் நடுப்பகுதியில் இருந்தது எனவும் கூறியுள்ளார். (ஆதாரம்-கோணேஸ்வரம் - மே. கு. பக்-7)

'மகாநாமனின்' போதிகாயா கல்வெட்டில் காணப்படும் சான்றுன்றினை மேலதிகமாகக் காட்டி, 'கிஸ்கல்கர்' என்பவர் வேதரின் கருத்தை ஆதரிக்கிறுர். நர்மதையும், மகாநதியும் (மகாவலிகங்கை) எழுகின்ற மேட்டு நிலமே லங்கா என்று 'ராம் தாஸ்' என்ற வரலாற்றுசிரியர் தெரிவித்துள்ளார். ('ராவணுஸ் லங்கா'-ராம்தாஸ் -IHG, IV, 1928, பக்கம்-339)

[தொடரும்]

## இராசி பலன்

30-07-1995

(தமிழுக்கு ஆடி-14)

ஞாயிற்றுக்கிழமை

திருதியை முன்னிரவு 11-03 வரை, மகம் நண்பகல் 12-36 வரை, மரணயோகம், இராகு காலம் மாலை 4-33 முதல் 6-03 வரை. சுபவேளை காலை 9-03 முதல் 10-33 வரை.

மேடம்: வீண் விரயம், தொழில் வெறுப்பு, மன வேதனை.

இடபம்; ரோக பயம், அருவெறுப்பு, அலைச்சல்.

மிதுனம்: காரியசித்தி, மித்திரர் உதவி, தனவரவு.

கடகம்: புதிய கடன், குடும்ப விவகாரம், வீண்விரோதம்.

சிங்கம்; குடும்ப ஒற்றுமை, தாய்வழி நினைவு, சுபகாரியம்.

கன்னி: அகௌரவம், தொழில் சிரமம், பணமுடை.

துலாம்: சுயதொழில் ஈடுபாடு, மாமனுர் உதவி, நன் மதிப்பு.

விருச்சிகம்: உல்லாச கேளிக்கை, இனசன உறவு, மனைவியின் விசுவாசம்.

தனுசு: தந்தையர் வெறுப்பு, உடலசதி, மறைமுக எதிர்ப்பு.

மகரம்: மனஉளைச்சல், மனை மாற்றம், நாணய குறைபாடு.

கும்பம்: செல்வந்தர் அநுகூலம், பெண் ஆதரவு, மன நிறைவு.

மீனம்: வித்தியாமேன்மை, சுபகாரியம், விவேகமான முடிவு.

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் ஆண்டுப்பொதுக் கூட்டம் இன்று 30ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி. ப. 4 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

# யாழ்ப்பாணம் சென்று கடமையாற்ற தமிழ் டாக்டர்கள் பின்னடிப்பு

## - அமைச்சர் பௌஸி கூறுகிறுர் -

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் சென்று கடமையாற்றுவதற்கு தமிழ் டாக்டர்கள் பின்னடிக்கிறுர்கள். இதற்கு மிஞ்சி நான் என்னசெய்வது. தமிழ் டாக்டர்கள் யாராவது வடக்கே சென்று கடமையாற்ற முன்வந்தால் அவர்களை முதலில் யாழ். போதனு வைத்தியசாலைக்கு அனுப்பி வைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுப்பேன்.

இவ்வாறு சுகாதார சமூக சேவைகள் அமைச்சர் எச்.எம் பௌசி யாழ். போதனு வைத்தியசாலை பதில் பணிப்பாருக்கு தெரிவித்துள்ளார்.

தற்போது யாழ். போதனு வைத்தியசாலை சத்திர சிகிச்சைப் பிரிவில் சத்திரக்கிச்சை டாக்டர்களுக்கு பெரும் பற்றுக்குறை நிலவி வருகிறது.

ஆகையால் சத்திரசிகிச்சைக்கான டாக்டர்களை தந்துதவுமாறு கொழும்பில் சுகாதார அமைச்சரை, யாழ். போதனு வைத்தியசாலை பதில் பணிப்பாளர் சந்தித்து பேச்சு நடத்திய சமயம் கேட்டுள்ளார்.

தமிழ் டாக்டர்கள் யாழ்ப்பாணம் சென்று கடமையாற்றுவதற்கு பின்னடிக்கிறுர்கள். சிலர் வடக்கில் இருந்தே வேறு மாவட்டங்கள் சென்று கடமையாற்றுவதற்கு விண்ணப்பிக்கிறுர்கள். ஆகையால் தமிழ் டாக்டர்கள் எவரேனும் வடக்கிற்கு சென்று கடமையாற்ற முன்வந்தால் அவர்களை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக சுகாதார அமைச்சர் உறுதியளித்துள்ளார். -170-சி

## புதிய உணவுமுத்திரை

(ஆனைப்பந்தி)

இடம் பெயர்ந்தோருக்குரிய 10வது தொடரிலக்க புதிய நிவாரண உணவு முத்திரைகள் தற்போது வழங்கப்பட்டுவருகின்றன.

இலக்கம் 28ஏ, 28பி, 29ஏ 29பி, 30ஏ, 30பி ஆகிய ஆறு புள்ளிகளையும் உள்ளடக்கிய இப்புதிய முத்திரைகள் அந்தந்தப் பிரிவு கிராம சேவையாளர்களின் மூலம் வழங்கப் படுகின்றன. 101

## பர்மிய

(6ம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் கோரிக்கைகளினதும் மதிப்பும் உலகளாவிய ரீதியில் பன்மடங்கு அதிகரித்தது.

இந்த நிலையில்தான் இராணுவ ஆட்சியாளர்கள் ஒரு பொதுத்தேர்தலை நடத்தும் அறிவிப்பை வெளியிட்டனர். இதில் அவர்களுக்குப் பெருத்த ஏமாற்றமே. மக்களின் அமோக ஆதரவு சூ-கியின் பக்கமே இருந்தது. தேர்தலில் வெற்றிபெற்ற பின்பும் சூ-கியிடம் ஆட்சிப் பொறுப்பு ஒப்படைக்கவில்லை. தொடர்ந்தும் வீட்டுக்காவலிலேயே வைத்திருந்தனர்.

சிறைச்சாலையிலிருந்து பர்மிய மக்களை நோக்கிப்பாயும் ஒரு நம்பிக்கை ஒளிக்கீற்றுக விளங்கிய சூ-கி விடுதலை பெற்றபின் தற்போது மேலும் மேலும் உரம்பெற்று உறுதியுடன் காணப்படுகிறுர்.

பதவிகளுக்காக மட்டும் வாக்குறுதிகளை வெறுமனே அள்ளி வீசுகின்ற தலைவர்கள் மலிந்துவிட்ட இந்த யுகத்தில் வாக்குறுதிகளையும் மக்களையும் காப்பாற்றுவதற்காகச் சிறையில் வாடிய ஆங்-சான்-சூ-கியால் உலகப் பெண்களுக்கே ஒரு தலைநிமிர்வு.

## க. பொ. த. உயர்தர பரீட்சை நிலைய மாற்றங்கள்

(யாழ்ப்பாணம்)

நாளை 31ம் திகதி ஆரம்பமாகவுள்ள க. பொ. த உயர்தர பரீட்சையின் பரீட்சை நிலையங்கள் கீழவருமாறு மாற்றம் செய்யப்படுகின்றன என யாழ் கல்வி வலயம் 1, 2ன் கல்விப்பணிப்பாளர்கள் அறிவித்துள்ளனர். மாற்றத்திற்குள்ளாகும் பரீட்சார்த்திகள் முன்கூட்டியே தங்களது பரீட்சை நிலையத்தினைத் தெரிந்துவைக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

ஸ்கந்தவரோதயாக்கல்லூரி மண்டபம் இல. 1, 2 இணுவில் இந்துக் கல்லூரியிலும், உடுவில் மகளிர் கல்லூரி மண்டப இல. 1, 2 கொக்குவில் இந்துக் கல்லூரியிலும், இராமநாதன் கல்லூரி மண்டப இல. 1 கோண்டாவில் இந்து ம. வியிலும், இராமநாதன் கல்லூரி மண்டப இல. 1 உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியிலும், இராமநாதன் கல்லூரி மண்டப இல. 3 தாவடி இந்து த.க.பா. விலும், உரும்பிராய் இந்துக்கல்லூரி மண்டப இல. 1 உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியிலும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டப இல. 3 மீசாலை வீரசிங்கம் ம. வியிலும் நடைபெறும். -சி

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995 - 07 - 30

ஞாயிறு இரவு

8-02 இசையரங்கம் நிகழ்ச்சிகள் - நாதஸ்வரக் கச்சேரி
8-30 செய்திகள்
8-40 தொடர் நாடகம் - கணேசமூர்த்தி எழுதிய ''இலங்கைமண்'' 4-ம் அங்கம்.

1995-07-31

திங்கள் காலை

7-02 மாவீர வணக்கம்
7-15 நீங்கள் கேட்டவை
7-30 செய்திகள்
7-30 பத்திரிகைச் செய்திகள்
7-45 நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

### தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995-07-30

ஞாயிறு மாலை

5-01 சிந்தனைச்சிதறல்
5-02 எழுச்சிகீதம்
5 10 புதியவை
5-15 மழலைகளுக்காக
5-30 கதம்பம்
6-00 சிந்தனைக்குச் சில விநாடிகள்
6-02 உங்கள் தெரிவு
6-10 செய்திகள்
6-95 உங்கள் தெரிவு நிகழ்ச்சியின் தொடர்ச்சி
6-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

## பரீட்சை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்பட்ட மாணவர்கள் இப் பரீட்சைக்கு தோற்றவுள்ளனர். இதற்கென 72 பரீட்சை மண்டபங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. 170-சி

## இரு தாக்குதலில்

(1-ம் பக்கத தொடர்ச்சி)

விடுதலைப்புலிகள் தரப்பில் எதுவித இழப்புகளுமின்றி மேற்கொள்ளப்பட்ட இத் தாக்குதலில் ஏ கே. ரகத் துப்பாக்கி-1 ரவைக் கூடுகள்-10 கைக்குண்டு-1, தொலைதொடர்புசாதனம்-1, நடுத்த ரவைகள்-210 ஆகிய ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றினுர்கள்.

அநுராதபுரத்தில் ரோந்து சென்ற பொலிஸ் அணி ஒன்றின்மீது விடுதலைப் புலிகள் நேற்று மேற்கொண்ட தாக்குதல் ஒன்றில் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் பலியானதுடன் 4 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இதேநேரம், திருகோணமலை மூதூர் இராணுவ முகாம் மீதும் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இராணுவத் தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டதாகவும், புலிகள் தரப்பில் 2ம் லெப் மணுவன் (தேவராஜ்- விஜயகுமார்-புத்தூர்) வீரச்சாவடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வி-சி

★ வெற்றிலைக்கேணி கடற்பகுதியில்

# இரு பாரிய கப்பல்களிலிருந்து துருப்புகள் ஆயுதங்கள்குவிப்பு

(சாவகச்சேரி)

வெற்றிலைக்கேணியில் கடல் படையின் பாரியகப்பல்களிற் இருந்து போர்த்தளபாடங்களும் இராணுவ உபகரணங்களும் துருப்புகளும் இறக்கப் பட்டு வருவாதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் மாலை வெற்றிலைக்கேணிப்பகுதிக்கு வந்த கடற்படையினர் பாரிய இரு கப்பல்களில் பெரும் தொகையான இராணுவ தளபாடங்கள் இறக்கப்பட்டு வருவதாக அப்பகுதியில் இவற்றை அவதானித்தவர்கள் தெரிவித்தார்கள்.

சுமார் 12 டோரப்படகுகள் பாதுகாப் வழங்கஇப்பகுதியில் இருந்து சிறுபடகுகள் மூலம் இவ்வாறு பொருட்கள்இறக்கப் பட்டுவருகின்றன.

கடந்த இருவாரங்களாக வெற்றிலைக்கேணிப் பகுதிக்கு அடிக்கடி இவ்வாறு பாரிய கப்பல் பலத்தபாதுகாப்புடன் திடீர் திடீர்என வந்து செல்வதாகவும் தெரிவித்தார்கள்.

கப்பல்களில் இருந்து பெரும் தொகையான இராணுவத்தினரை கொண்டு வந்து இப்பகுதியில் குவிப்பதாகவும் நள்ளிரவிலேயே இவ்வாறு இப்பகுதியில் நடைபெற்று வருவதாகவும் அண்மைக் காலத்தில் பெரும் தொகையான துருப்புக்கள் இப்பகுதியில் கொண்டுவந்து குவிக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

155-163-சி

# புலிகளின் தாக்குதலுக்கு குருநாகலும் இலக்காகலாம்

(கொழும்பு)

புத்தளத்தில் வில்பத்து காட்டுப்பகுதிக்கு அருகிலுள்ள இலவன்குளம் இராணுவ காவல் நிலையம் கடந்த செவ்வாய்க்கிழமை விடுதலைப் புலிகளினால் தாக்கி அழிக்கப் பட்டதைத் தொடர்ந்து, முழுமையான சிங்களமாவட்டமும் கொழும்புக்கு அடுத்ததாக உள்ள மாவட்டமுமான குருநாகலும் தாக்குதலுக்கு உள்ளாகலாமென பாதுகாப்பு ஆய்வாளர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

இலவன்குளம் காவல் நிலையம் வில்பத்து வனப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சிங்களக் குடியேற்றங்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக நிறுவப்பட்டமை அவற்றின் பாதுகாப்புக்கு பாரிய அச்சுறுத்தலாக அமைந்து விட்டதாகவும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர் இ-சி

# போர் நிறுத்தம் மேற்கொண்டு சமாதானப் பேச்சை ஆரம்பிக்கவும்

– கருணாநிதி கோரிக்கை

(சென்னை)

இலங்கைத்தமிழர் பிரச்சனைக்கு தீர்வு காண உடனடியாக போர் நிறுத்தமும் சமாதானப் பேச்சும் தொடங்க வேண்டியது அவசியம் என்று தி.மு.க. தலைவர் திரு.மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

உடனடியாக உயிர் பலிகளை நிறுத்தி சண்டையில் ஈடுபட்டிருக்கும் இரு தரப் பாரிடமிருந்தும் நல்ல பதிலைப் பெறுவதற்கு இலங்கையிலுள்ள நடுநிலையாளர்கள் முன்வரவேண்டும் என்றும் திரு. கருணாநிதி நேற்று சென்னையில் வெளியிட்டுள்ள அறிக்கை யொன்றில் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அப்பாவித்தமிழர்கள் அரசபடையினரால் கொல்லப்படுவதை கண்டித்து அண்மையில் திரு. கருணாநிதி அறிக்கையொன்றை வெளியிட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு தமிழகத்திலுள்ள பல கட்சிகள் தமது ஆதரவைத் தெரிவித்து வருவதுடன் ஈழத்தமிழர் கொலைகளைக்கண்டித்து ஆர்ப்பாட்டங்களை நடத்தி வந்ததும் குறிப்பிடத்தக்கது. ரி-சி

வலி மேற்கில்

## படையினர் கைதுசெய்த 8 பொதுமக்கள் விடுதலை

(யாழ்ப்பாணம்)

வலிகாமத்தில் இராணுவத்தினர் மேற்கொண்ட ''முன்னேறிப்பாய்தல்'' இராணுவ நடவடிக்கையின்போது இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டவர்களில் எட்டு பொதுமக்கள் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் முன்னிலையில் விடுவிக்கப்பட்ட இவர்கள் பின்னர் ஹபரண கப்பலில் காங்கேசன்துறையில் இருந்து பருத்தித் துறைக்கு அழைத்து வரப் பட்டனர்

விடுவிக்கப்பட்டவர்களின் விபரம்:

ஜேம்ஸ்ஸ்ரான்லெஸ் சுதன்னன், வயது 15, பெரியவிளான், துரைராசா சுதாகர், சாரதி, வயது 29, இளைய தம்பி இராசரத்தினம் வயது 68, அளவெட்டி, மார்க்கண்டு இரத்தினசிங்கம், வயது 31, மணற்புலம், அளவெட்டி கிழக்கு, முருகன் மகாலக்சுமி, வயது 35, தம்பிஐயர் செல்லத்துரைக் குருக்கள், வயது 68, ஆலங்குளாய், சண்டிலிப்பாய், கணபதி கந்தசாமி, வயது 55, யாழ்ப்பாணம், கனகரத்தினம் மனோகரநேசன் வயது 46, யாழ்ப்பாணம்.

இவர்கள் பின்னர் உறவினர்களிடம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரால் ஒப்படைக்கப்பட்டனர்.

இதேவேளை வலிகாமம் பகுதியைச் சேர்ந்த 47 பொதுமக்கள் தற்போது இராணுவத்தின் பிடியில் பலாலியில் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

-170-160-சி


விராட் விஸ்வப் பிரமனே நம

யாழ். வண்ணை — கன்னாதிட்டி

அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானம்

மஹோற்சவ விஞ்ஞாபனம்

31 – 07 – 1995 திங்கள் — ஆடிப்பூரம்
01 – 08 – 1995 செவ்வாய் — கொடியேற்றம் காலை 9 மணி
08 – 08 – 1995 செவ்வாய் — சப்பரத்திருவிழா
09 – 08 – 1995 புதன் — தேர்த்திருவிழா காலை 9 மணி
10 – 08 – 1995 வியாழன் — தீர்த்தோற்சவம் காலை 8-30 மணி
11 – 08 – 1995 வெள்ளி — பூங்காவனம் மாலை 4 மணி

அன்பளிப்பு:
கணேசா நகையகம்,
194, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
கணேசமூர்த்தி நகை வியாபாரம்,
55, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
★ ஓடர் நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும். (சி-1577)


யாழ் குடாநாட்டில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளன.

இதேவேளை மண்ணெண்ணை கொண்டுசெல்ல சட்டப்படி தடையில்லை என்றாலும் இராணுவம் தனது சோதனைச் சாவடியில் மண்ணெண்ணையை கொண்டுசெல்ல அனுமதிப்பதில்லை. இதனால் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளுக்கு மண்ணெண்ணை வருவது தடுக்கப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் தெரிவித்துள்ளதாகவும் பி. பி. ஸி. தெரிவித்தது.

இதற்கிடையில் யாழ்ப்பாண குடாநாட்டிற்கு 50 மெற்றிக் தொன் சவர்க்காரத்தை ஏற்றி வந்த கப்பலை கடற்படையினர் திருப்பி அனுப்பியுள்ளனர்.

மேற்படி சவர்க்காரத்தை இறக்க கடற்படையினர் அனுமதிக்காததையடுத்தே காங்கேசன்துறை துறைமுகம்வரை வந்த இக்கப்பல் கொழும்பிற்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. -சி

க. பொ. த (உ/த) பரீட்சை

## அனுமதி அட்டைகள் இன்று விநியோகம்

[யாழ்ப்பாணம்]

க. பொ. த. உயர்தர பரீட்சைக்கு தோற்றும் பாடசாலை மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் நேற்று ஹபரண கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளன.

மாணவர் தத்தம் பாடசாலைகளுக்கு இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9-00 மணிக்கு சமுகமளிக்குமாறு யாழ். கல்வி வலயம் ஒன்றின் பணிப்பாளர் இ. சிவானந்தன் தெரிவித்துள்ளார் 170-சி

க. பொ. த.(சா/த)

## விண்ணப் படிவம் வந்தன

[யாழ்ப்பாணம்]

க. பொ. த. (சாதாரணம்) தேர்வுக்கான விண்ணப்பப் படிவங்கள் வலயம் 2ன் கல்விப்பணிப்பாளரினால் கொண்டு வரப்பட்டுள்ளது.

விண்ணப்ப முடிவு திகதி 15-08-95 ஆகும். சகல பாடசாலைகளும் விண்ணப்பத்தினை நிரப்பி 10-08-95 வியாழக் கிழமைக்கு முன்னதாக வலயக் கல்விப் பணிமனையில் ஒப்படைக்கவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. -சி

## அவசர விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம், யாழ் தொழில் நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், தனியார் கல்வி நிலையங்கள், யாழ். மாநகரசபை, பாடசாலைகள் (அதிபர்கள், ஆசிரியர்கள் என்பன தவிர்ந்த நல்லூர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள்/சபைகள் / பணிமனைகள், அரச சார்பற்ற நிறுவனங்கள், பலநோக்கு/சிக்கன கடனுதவு/ பனைதென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள், வட பிராந்திய போக்குவரத்துச் சபை, அஞ்சல் உபஅஞ்சல் அலுவலகங்கள், ஏனைய அரச பணிமனைகள், சனசமூக நிலையங்கள், கிராம / மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள், இளைஞர் கழகங்கள் ஏனைய பொது அமைப்புக்கள், மன்றங்கள் என்பவற்றைச் சேர்ந்த சகல தரங்களிலுமான அனைத்துப் பணியாளர்களையும், பிரதிநிதிகளையும் நாளை திங்கள் பி. ப. 3-00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் நடைபெற உள்ள அவசர விசேட கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார். -சி

## தேசியபாதுகாப்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களின் விடுதலையை உறுதி செய்ய பெருமளவு நன்கொடைகளைத் தேசிய பாதுகாப்பு நிதியாக வழங்குவதற்கு தமிழ் மக்கள் பெருமெடுப்பில் முன்வந்துள்ளமை கண்டு மிகவும் மகிழ்ச்சியடைவதாக விடுதலைப்புலிகளின் நிதித்துறை தெரிவித்துள்ளது

நன்கொடைகளை வழங்க விரும்புவோர், பின்வரும் இடங்களில் தாமே நேரிற் சென்று காசைக் கொடுத்து அதற்கானபற்றுத்துண்டைப் பெற்றுக் கொள்ளுமாறும், தேசியப் பாதுகாப்பு நிதிப் பற்றுத்துண்டைப் பெறாமல் தயவுசெய்து யாரிடமும் காசைக் கொடுக்கவேண்டாமெனவும்வேண்டுகின்றோம்.

தேசிய பாதுகாப்பு நிதி செலுத்தும் இடங்கள்:

வலிகாமம்: வருவாய்ப் பகுதிச் செயலகம், பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தென்மராட்சி: வருவாய்ப் பகுதிச் செயலகம், கச்சாய் வீதி, சாவகச்சேரி

வடமராட்சி: வருவாய்ப் பகுதிச் செயலகம், பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

காசு கட்டும் இடங்கள் விரிவுபடுத்தப்படும்போது அது பற்றி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. -சி


உ

யாழ். வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரசுவாமி (வண்ணை சிவன் கோவில்)

★ தேவி மஹோற்சவம் - தேர்த்திருவிழா ★

இன்று ( 30 - 7 - 95 ) ஞாயிறு காலை 9-00 மணி

மங்கள இசை: காரைநகர் திரு. கே. கணேசன் குழுவினர் — நண்பகல் 12-00 மணிக்கு அன்னதானம்

[சி-1576] கனகசபை தர்மகுலசிங்கம்.


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில், மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு யூலை மாதம் 30-ம் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News paper at the General Postoffice Sri Lanka under Licenc Number B / 1633613.